ENVIRONMENTAL STUDIES

(OUR WONDERFUL WORLD)

சுற்றுப்புற அறிவியல் (நமது அற்புதமான உலகம்)

Class (வகுப்பு) - 3

Semester (பருவம்) - 1

Lesson No. பாட எண்	Lesson Name பாடத்தின் பெயர்	No. of Periods பிரிவேளைகள்	Month மாதம்	Pages பக்க எண்
	Readiness (Refer to Readiness book) தயார்நிலை திட்டம்		June ஜுன்	
1.	My Family என் குடும்பம்	10	July ஜுலை	134 - 159
2.	Plants Around Us நம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள்	10	July ஜுலை	160 - 183
3.	Animals Around Us நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள்	11	August ஆகஸ்ட்	184 - 209
4.	Our Body நமது உடல்	9	August, September ஆகஸ்ட்,செப்டம்பர்	210 - 231
5.	Food We Eat நாம் உண்ணும் உணவு	10	September செப்டம்பர்	232 - 257
6.	Water - A Precious Gift தண்ணீர் ஒரு மதிப்புமிக்க வளம்	10	October அக்டோபர்	258 - 277

AP-SCERT

A6V9D6
Teacher corner

V5D9F1
Student corner

Learning Standards

The Curricular Goals and Competencies for The **Our Wonderful World** indicate the expectations from students related to understanding of the social and physical environment at this stage. A structured exploration of this environment develops understanding, as well as the capacities to deepen and extend this understanding.

Curricular Goals & Competencies

CG-1 Explores and engages with the natural and socio-cultural environment in their surroundings	**C-1.1 :** Observes and identifies the natural (insects, plants, birds, animals, geographical features, sun and moon, stars, planets, natural resources) and social (houses, relationships) components in their immediate environment. **C-1.2 :** Describes relationships (including between humans and animals/ nature) and traditions (art forms, celebrations, festivals) in the family and community. **C-1.3 :** Asks questions and makes predictions about simple patterns (season change, food chain, phases of the moon, movement of stars and planets, shapes of trees, plants, leaves, and flowers, rituals, celebrations) observed in the immediate environment. **C-1.4 :** Explains the functioning of local institutions (family, school, bank/ post office, market, and panchayat) in different forms (story, drawing, tabulating data, reports), and analyses their roles. **C-1.5 :** Uses local materials to create simple objects (family tree, envelopes, origami animals) on their own for display or use in classroom processes.
CG-2 Understands the interdependence in their environ - ment through observation and experiences, deve-loping the basis for appreciation of the idea of 'Vasudhaiva Kutumbakam'	**C-2.1 :** Identifies natural and humanmade systems that support their lives (water supply, water cycle, river flow systems, seasons, life cycle of plants and animals, food, household items, transport, communication, electricity in the home). **C-2.2 :** Describes the relationship between the natural environment and cultural practices in their immediate environment (nature of work, food, festivals, traditions). **C-2.3 :** Connects changes in the environment and the lives of their family and community, as communicated by elders and through local stories (changes in occupation, food habits, resources, celebrations, communication).

AP SCERT

CG-3 Explains how to ensure the safety of self and others in different (normal as well as emergency) situations	**C-3.1 :** Describes the basic safety needs and protection (health and hygiene, food, water, shelter, precautions, awareness of emergency situations, abuse, and unsafe situations) of humans, birds, and animals. **C-3.2 :** Discusses how to prepare for emergency situations (smoke, fire, small injuries, burns, electrical safety, unseasonal rains, fallen trees) based on discussions with family and community, or personal experiences. **C-3.3 :** Develops simple labels and slogans, and participates in roleplay on safety and protection in the local environment to be displayed/done in school and locality.
CG-4 Develops sensitivity towards social and natural environment	**C-4.1 :** Observes and describes diversity among plants, and birds and animals in their immediate environment (shape, sounds, food habits, growth, habitat). **C-4.2 :** Observes and describes cultural diversity in their immediate environment (food, clothing, games, different seasons, festivals related to harvest and sowing). **C-4.3 :** Describes usage of natural resources in their immediate environment. **C-4.4 :** Demonstrates how natural resources can be shared, maintained, and conserved (trees, use of rainwater, benefits of millets). **C-4.5 :** Identifies needs of plants, birds, and animals, and how they can be supported (water, soil, food, care). **C-4.6 :** Identifies the needs of people in different situations – in terms of access to resources, equal opportunities, work distribution, and shelter **C-4.7 :** Learns about basic social and behavioural norms, values, and dispositions that benefit our social and natural environments and that help our society function smoothly (using dustbins, standing in queues, conserving water, using public transportation, keeping one's environment clean, always helping others in need regardless of background).
CG-5 Develops the ability to read and interpret simple maps	**C-5.1:** Explains a line drawing of their school, village, and ward. **C-5.2:** Draws a sketch of their school, village, and ward using symbols and directions. **C-5.3:** Reads simple maps of city, state, and country to identify natural and humanmade features (well, lake, post office, school, hospital) with reference to symbols and directions.

AP SCERT

CG-6 Uses data and information from various sources to investigate questions related to their immediate environment	**C-6.1 :** Performs simple inquiry related to specific questions independently or in groups. **C-6.2 :** Presents observations and findings through different creative modes (drawing, diagram, poem, play, skit, oral and written expression).
CG-7 Gains foundational familiarity with basic concepts and methods from the natural sciences (life sciences, physical sciences, and earth and space sciences) and engineering	**C-7.1 :** Gains familiarity with using the scientific method in investigations, as well as familiarity with other crosscutting concepts such as energy, matter, and systems that apply across the domains of science and engineering. **C-7.2 :** Gains familiarity with disciplinary core ideas in the natural sciences, as well as in engineering, technology, and applications of science, which reflect the content that will be learned across subject areas in later grades.

AP – SCERT

The Way We Learn Science

Observe
↓
Think
↓
Do
↓
Care
↓
Apply

LEARNING SCIENCE - NEP 2020

This textbook is developed in accordance with the National Education Policy (NEP) 2020 and the National Curriculum Framework for School Education (NCF-SE-2023), focusing on developing scientific understanding and scientific temper among children. Science helps children understand the natural and physical world around them. As stated in NEP 2020, children learn Science best by observing, asking questions, exploring, and doing simple hands-on activities. Science encourages children to be curious, think logically, and find answers by using evidence. It helps them connect classroom learning with real-life experiences. Through Science, children learn to care for nature, plants, animals, and their surroundings. Science also develops problem-solving skills, creativity, teamwork, and responsible decision-making, helping children grow into thoughtful, confident, and responsible learners.

AP SCERT

அறிவியல் கற்றல் - NEP 2020

இந்த பாடப்புத்தகம் தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 மற்றும் பள்ளி கல்விக்கான தேசிய பாடத்திட்ட அமைப்பு (NCF-SE-2023) ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் குழந்தைகளில் அறிவியல் புரிதலும், அறிவியல் மனப்பான்மையும் வளர்ப்பதாகும். குழந்தைகள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கை மற்றும் பொருள் உலகத்தை புரிந்துகொள்ள அறிவியல் உதவுகிறது. NEP 2020 ல் கூறப்பட்டதுபோல், குழந்தைகள் கவனித்து பார்க்கும்போது, கேள்விகள் கேட்கும்போது, ஆராயும்போது மற்றும் எளிய செய்முறை செயல்பாடுகளை (hands-on-activities) செய்வதன் மூலம் அறிவியலை சிறப்பாக கற்றுக் கொள்கிறார்கள். அறிவியல் குழந்தைகளை ஆர்வமுள்ளவர்களாகவும், தர்க்கமாக சிந்திக்கக் கூடியவர்களாகவும் மாற்றுகிறது. மேலும், ஆதாரங்களை பயன்படுத்தி சரியான பதில்களை கண்டுபிடிக்க கற்றுக்கொடுக்கிறது. அது மட்டுமல்லாமல் வகுப்பறையில் கற்றதை அன்றாட வாழ்க்கையுடன் இணைக்கவும் உதவுகிறது. அறிவியல் மூலம் குழந்தைகள் இயற்கை, தாவரங்கள், விலங்குகள் மற்றும் சுற்றுப்புறத்தை பாதுகாக்கும் பொறுப்புணர்வையும் கற்றுக்கொள்கிறார்கள். மேலும், அறிவியல் குழந்தைகளில் பிரச்சினை தீர்க்கும் திறன், படைப்பாற்றல், குழு வேலை மனப்பான்மை மற்றும் பொறுப்பான முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை வளர்க்கிறது. இதனால் அவர்கள் சிந்தனையுடன், தன்னம்பிக்கையுடன், பொறுப்புடன் செயல்படும் நல்ல கற்றாலளர்களாக வளர்கிறார்கள்.



My Family

Z1U2F5

Learning Outcomes

Pupils will be able to:

- Explain about the family. (CG-2)
- Recognize different occupations in our surroundings. (CG-2)
- Identify members living together in a family. (CG-1)
- Appreciate the care given by family members. (CG-2)
- Identify resemblance within family members. (CG-1)
- Identify different types of home appliances. (CG-1)
- Know about the family flow chart. (CG-1)
- Appreciate celebrating festivals. (CG-4)

It was Sunday. Pavan came to Anu's house to play. Anu showed her photo album to Pavan. Pavan asked about the people in the pictures. Anu introduced the members of her family to Pavan.



AP SCERT

பாடம் 1

என் குடும்பம்

F9L7J6

கற்றல் விளைவுகள்

மாணவர்கள் இவற்றை செய்வர்:

- குடும்பம் பற்றி விளக்குவர். (CG-2)
- நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு தொழில்களை அடையாளம் காண்பர். (CG-2)
- ஒரு குடும்பத்தில் ஒன்றாக வாழும் உறுப்பினர்களை அடையாளம் காண்பர்.(CG-1)
- குடும்ப உறுப்பினர்கள் காட்டும் அக்கறையைப் பாராட்டுவர்.(CG-2)
- குடும்ப உறுப்பினர்களிடையே உள்ள ஒற்றுமையை அடையாளம் காண்பர். (CG-1)
- பல்வேறு வகையான வீட்டு உபயோகப் பொருட்களை அடையாளம் காண்பர். (CG-1)
- குடும்பத்தின் உறவுமுறை வரைபடம் பற்றி அறிவர். (CG-1)
- திருவிழாக்கள் கொண்டாடுவதைப் பாராட்டுவர். (CG-4)

அன்று ஞாயிற்றுக்கிழமை. பவன், அனுவின் வீட்டிற்கு விளையாட வந்தான். அனு தன்னுடைய புகைப்பட ஆல்பத்தை பவனிடம் காட்டினாள். புகைப்படங்களில் உள்ள நபர்களைப் பற்றி பவன் கேட்டான். அனு தன் குடும்ப உறுப்பினர்களை பவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.



AP SCERT

Anu : This is my family photo. This is my grandfather. He is in the middle. My father is standing to the left of my grandfather. My mother is standing to the right of my grandmother. They are my brothers Rishi and Rohan. This is my pet Sheero. This is my happy family.

Pavan : Oh! Nice family.

Anu : What about your family?

Pavan : In my family, we are three. My father Venkat, my mother Mani and me.

We all live with our families. Generally, a family consists of grandfather, grandmother, father, mother, brothers and sisters. 'Brothers and sisters' are also called 'siblings'.

Who lives with you in your family?

AP-SCERT

Write about your family :

- My father's name is ....
- My mother's name is ....
- I have .... siblings.
- There are .... members in my family.

Draw your family picture using buttons and match sticks :



அனு : இது எங்களுடைய குடும்ப புகைப்படம். நடுவில் இருப்பவர் என் தாத்தா. என் தாத்தாவுக்கு இடதுபுறம் நிற்பவர் என் தந்தை. என் பாட்டியின் வலப்புறம் நிற்பவர் என் அம்மா. இவர்கள் என் சகோதரர்கள் ரிஷி மற்றும் ரோஹன். இது என் வளர்ப்பு பிராணி ஷீரோ. இது எங்களுடைய மகிழ்ச்சியான குடும்பம் ஆகும்.

பவன் : ஓ! அழகான குடும்பம்.

அனு : உன் குடும்பத்தைப் பற்றி கூறு.

பவன் : எங்கள் குடும்பத்தில் மொத்தம் மூன்று பேர். என் தந்தை வெங்கட், என் தாய் மணி மற்றும் நான்.

நாம் அனைவரும் நம் குடும்பங்களுடன் வாழ்கிறோம். குடும்பத்தில் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள் இருப்பர். (சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை 'உடன்பிறந்தவர்கள்' என அழைப்பர்.)

உன் குடும்பத்தில் யாரெல்லாம் உன்னுடன் வாழ்கிறார்கள்?

உனது குடும்பம் பற்றி எழுது.

- என் தந்தையின் பெயர் ....
- என் தாயார் பெயர்..
- என் உடன்பிறந்தவர்கள் .... பேர்.
- என் குடும்பத்தில் .... உறுப்பினர்கள் உள்ளனர்.

உன் குடும்பத்தின் படத்தை பொத்தான்கள் மற்றும் தீக்குச்சிகளைக் கொண்டு வரையவும்.





AP-SCERT

Family flow chart :

A family flow chart shows the relationships between family members. An example is given here.



Role of family members and helping each other :

Observe the picture given below. Tell what the people are doing in the picture.

Every family member has an important role. The family members work together and share the work. They all love and care for each other. Parents take up the most important works. Grandparents teach us good manners. Children also help with house work and respect the elders.

AP SCERT

குடும்ப உறவுமுறை வரைபடம் :

ஒரு குடும்ப உறவுமுறை வரைபடம் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான உறவுகளைக் காட்டுகிறது. ஒரு உதாரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



AP SCERT

குடும்ப உறுப்பினர்களின் பங்கு மற்றும் ஒருவருக்கொருவர் உதவி செய்துக் கொள்ளுதல் :

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கவனிக்கவும். ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் என்ன செய்கிறார்கள் என்று கூறுங்கள்.

குடும்பத்தில் ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் ஒரு முக்கியமான பங்கு உண்டு. குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக வேலை செய்கிறார்கள் மற்றும் வேலையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள் மற்றும் கவனித்துக் கொள்கிறார்கள். பெற்றோர்கள் மிக முக்கியமான வேலைகளைச் செய்கிறார்கள். தாத்தா, பாட்டி நமக்கு நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். குழந்தைகளும் வீட்டு வேலைகளில் உதவுகிறார்கள் மற்றும் பெரியவர்களை மதிக்கிறார்கள்.

Let us Do

Ask any three of your classmates about the different kinds of work family members do.

Collect the information and fill in the table.

S.No.	Name of the friend	Work done by the mother	Work done by the father	Work done by all family members
Eg.1	Suma	Cooking	Cutting vegetables	Cleaning the house

AP – SCERT



Think and Discuss

- Ravi and his sister share all the work at home. Is this good? Why?
- Meena does her homework, cleans her bag, and carries her books alone. She feels tired and sad. What do you think about this?

Celebration of festivals in a family :

Festivals are special days of joy for us. We celebrate, enjoy and share work during festivals. This enhances happiness among family members. Festivals bring all family members together in one place. We decorate the home and prepare special dishes with our family.

இதைச் செய்வோம்

உன் வகுப்புத் தோழர்கள் மூவரிடம் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் செய்யும் பல்வேறு வேலைகளைப் பற்றிக் கேள்.

சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு அட்டவணையை நிரப்புக.

வ. எண்.	நண்பரின் பெயர்	அம்மா செய்யும் வேலை	அப்பா செய்யும் வேலை	அனைத்து குடும்ப உறுப்பினர்களும் செய்யும் வேலை
எ.கா.1	சுமா	சமைத்தல்	காய்கறிகளை வெட்டுதல்	வீட்டை சுத்தம் செய்தல்

AP – SCERT



சிந்தித்து கலந்துரையாடு

- ரவியும் அவனது சகோதரியும் வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் பகிர்ந்துக் கொள்கின்றனர். இது நல்லதா? ஏன்?
- மீனா தன் வீட்டுப்பாடத்தைச் செய்கிறாள். தன் பையைச் சுத்தம் செய்கிறாள். தன் புத்தகங்களை தானே சுமந்து செல்கிறாள். அவள் சோர்வாகவும், சோகமாகவும் உணர்கிறாள். இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

குடும்பத்தில் பண்டிகைகளைக் கொண்டாடுதல் :

பண்டிகைகள் நமக்கு மகிழ்ச்சி தரும் சிறப்புமிக்க நாட்கள் ஆகும். நாம் பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம், மகிழ்கிறோம் மற்றும் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்கிறோம். இது குடும்ப உறுப்பினர்களிடையே மகிழ்ச்சியை அதிகரிக்கிறது. பண்டிகைகள் அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் ஒரே இடத்தில் ஒன்றிணைக்கின்றன. நம் வீட்டை அலங்கரித்து, நம் குடும்பத்துடன் சிறப்பு உணவுகளைத் தயார் செய்கிறோம்.

Activity : Observe the pictures of these festivals and discuss what work you share during festivals in your family.

Ramzan



Sankranti

Christmas



Diwali

AP-SCERT

Note to the teacher :

Discuss with the students regarding the local festivals celebrated in their surroundings.

Helping others at home makes the work easy and keeps everyone happy. Love and affection develop among the family members when they share their work during festival time.

செயல் : கீழுள்ள பண்டிகைகளின் படங்களைப் பார்த்து, உங்கள் குடும்பத்தில் பண்டிகைகளின் போது நீங்கள் என்ன வேலை பகிர்ந்து கொள்கிறீர்கள் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

ரம்ஜான்



பொங்கல் திருவிழா

கிறிஸ்துமஸ்



தீபாவளி

ஆசிரியருக்கான குறிப்பு :

உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் உள்ளூர் பண்டிகைகளைக் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

வீட்டில் மற்றவர்களுக்கு உதவுவது வேலையை எளிதாக்குகிறது மற்றும் அனைவரையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது. பண்டிகை காலங்களில் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் வேலையைப் பகிர்ந்து கொள்ளும்போது அன்பும் பாசமும் வளரும்.

AP – SCERT

Professions & Occupations :

Our needs are fulfilled by the work done by our mother, father and other family members. Like our family, there would be people in our surroundings doing different kinds of work.

Examples : Doctor, Lawyer, Police, Engineer. These are some professions. Let us know about some occupations.

In the following pictures, there are people doing different kinds of work. Observe them and say how they help people.

This is Rani.
She weaves baskets.



This is Rajesh.
He mends the shoes.



This is Kumar.
He cuts the hair.

This is Nazeera.
She is a tailor.

What other kinds of works are being done in your surroundings?

There would be people doing different kinds of work in your surroundings. Eswar sweeps the roads and cleans the drains. As the keep our surroundings clean, we stay healthy. We call them sanitation workers.

- Who else does different kinds of work?

We have seen people doing different kinds of work outside. In the same way, we need help to finish our work at home fast. That is why we use various machines which are called **home appliances**. These machines help us and save a lot of time.

தொழில்கள் மற்றும் வேலைகள் :

நமது தேவைகள் நம் தாய், தந்தை மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் செய்யும் வேலைகளால் பூர்த்தி செய்யப்படுகின்றன. நமது குடும்பத்தைப் போலவே, நம்மைச் சுற்றியுள்ளவர்களும் வெவ்வேறு வகையான வேலைகளைச் செய்கிறார்கள்.

உதாரணமாக : மருத்துவர், வழக்கறிஞர், காவலர், பொறியாளர் போன்றவை சில தொழில்கள். மேலும் சில தொழில்கள் பற்றி அறிந்துக் கொள்வோம்.

பின்வரும் படங்களில், மக்கள் வெவ்வேறு வகையான வேலைகளைச் செய்கிறார்கள். அவர்களைக் கவனித்து, அவர்கள் மக்களுக்கு எவ்வாறு உதவுகிறார்கள் என்று கூறுங்கள்.

இவர் பெயர் ராணி. இவர் கூடைகளை முடைகிறார்.



இவர் பெயர் ராஜேஷ். இவர் காலணிகளை தைக்கிறார்.

இவர் பெயர் குமார். இவர் தலைமுடியை வெட்டுகிறார்.

இவர் பெயர் நஜீரா. இவர் துணிகளை தைக்கிறார்.

உங்கள் பகுதியில் வேறு என்னென்ன தொழில்கள் செய்யப்படுகின்றன?

உங்கள் சுற்றுப்புறங்களில் வெவ்வேறு வகையான வேலைகளைச் செய்யும் மக்கள் இருப்பார்கள். ஈஸ்வர் சாலைகளைப் பெருக்கி வடிகால்களை சுத்தம் செய்கிறார். நம் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பதால், நாம் ஆரோக்கியமாக இருக்கிறோம். நாம் அவர்களைத் துப்புரவு பணியாளர்கள் என்று அழைக்கிறோம்.

- வேறு யார் வெவ்வேறு வகையான வேலைகளைச் செய்கிறார்கள்?

“மக்கள் வெளியே வெவ்வேறு வகையான வேலைகளைச் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். அதேபோன்று, வீட்டில் நமது வேலையை விரைவாக முடிக்க நமக்கு உதவி தேவை. அதனால்தான் **வீட்டு உபயோகப் பொருட்கள்** எனப்படும் பல்வேறு இயந்திரங்களைப் பயன்படுத்துகிறோம். இந்த இயந்திரங்கள் நமக்கு உதவுகின்றன மற்றும் நிறைய நேரத்தை மிச்சப்படுத்துகின்றன.”

Activity :

Home Appliances :

Look at this picture showing use of home appliances. Name these appliances.



What home appliances do you have in your home? Write their names in the space given below.

....

Good practices:

Look at the good practices which lead to good health.

AP – SCERT

Mary : Hi! I am Mary. My mother, father, sister and I leave our slippers and place them outside in an order before we enter the house.

செயல் :

வீட்டு உபயோகப் பொருட்கள் :

கீழுள்ள படத்தில் வீட்டு உபயோகப் பொருட்களின் பயன்பாட்டைப் பாருங்கள். இந்த உபகரணங்களின் பெயர்களை கூறவும்.



உங்கள் வீட்டில் என்னென்ன வீட்டு உபயோகப் பொருட்கள் உள்ளன? கீழுள்ள காலியிடத்தில் அவற்றின் பெயர்களை எழுதுங்கள்.

....

நல்ல பழக்கவழக்கங்கள் :

நல்ல ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் நல்ல பழக்கவழக்கங்களைப் பாருங்கள்.

மேரி : ஹாய்! நான் மேரி. என் அம்மா, அப்பா, சகோதரி மற்றும் நான் எங்கள் காலணிகளை வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பு வெளியே ஒரு வரிசையில் வைப்போம்.

AP-SCERT

Vijay : Hi! I am Vijay. My father and mother bow to my grandparents before leaving the house. We have to respect our elders.



Uma : I am Uma. Surely, I plant a tree on my birthday.

Riya: Hi! I am Riya. Our family eat together at night.



Do you have any good practice in your family?

Some practices pass on from parents to children in families.

Whom do you look like?

Usually, people in a family are similar in the way they look and behave.

Read the following narration.

Hi! I am Radhika. My ears resemble my father's ears.



AP – SCERT

விஜய்: ஹாய்! நான் விஜய். என் தந்தையும் தாயும் வீட்டை விட்டு புறப்படும் முன் என் தாத்தா, பாட்டி காலில் விழுந்து வணங்குவார்கள். நாம் நம் பெரியவர்களை மதிக்க வேண்டும்.



உமா : நான் உமா. நிச்சயமாக, என் பிறந்த நாளில் ஒரு மரக்கன்று நடுவேன்.

ரியா : ஹாய்! நான் ரியா. எங்கள் குடும்பத்தினர் இரவில் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுவோம்.

உங்கள் குடும்பத்தில் ஏதேனும் நல்ல பழக்கம் உள்ளதா?

சில பழக்கவழக்கங்கள் குடும்பங்களில் பெற்றோரிடமிருந்து குழந்தைகள் தெரிந்துக்கொள்வர்.

AP SCERT

நீ யாரைப்போல் இருக்கிறாய்?

பொதுவாக, ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருப்பர். ஒரே மாதிரியாக நடந்துக்கொள்வர்.

கீழுள்ள கூற்றுகளை படிக்கவும்.

ஹாய்! நான் ராதிகா. என் காதுகள் என் தந்தையின் காதுகளைப் போல உள்ளன.



Hi! I am Swathi.
I have thick hair
like my mother.



Hi! I am David.
My sharp nose-tip
resembles my
father's nose.



I am Ravi.
My eyes resemble
my mother's eyes.



I am Satish. My
grandmother said that my face
resembles my grandfather.

AP – SCERT

Some features like skin colour (brown, dark, fair), height (tall, medium, short) are parental features that pass on from parents to children.

Sometimes there are similarities in the behaviour of the children and other members of the family. You may walk like your uncle.

Do the faces of all people look alike?

நான் ஸ்வாதி. என் அடர்த்தியான தலைமுடி என் அம்மாவைப் போலவே உள்ளது.

ஹாய்! நான் டேவிட். என் மூக்கின் கூர்மையான நுனி என் தந்தையின் மூக்கைப் போலவே உள்ளன.



நான் ரவி. என் கண்கள் என் அம்மாவின் கண்களைப் போல் உள்ளன.



நான் சதீஷ். என் முகம் என் தாத்தாவின் முகம்போல் இருப்பதாக என் பாட்டி கூறினார்.

AP – SCERT

பொதுவாக சில பண்புகளான தோலின் நிறம் (பழுப்பு, கருப்பு, மாநிறம்), உயரம் (உயரம், நடுத்தரம், குட்டை) ஆகியவை பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு வருகின்றன.

சில நேரங்களில் குடும்பத்திலுள்ள குழந்தைகள் மற்றும் பிற உறுப்பினர்களின் நடத்தைகளில் ஒருமித்த பண்புகள் காணப்படும். நீ உன் மாமாவைப் போலவே நடக்கலாம்.

அனைத்து மக்களின் முகங்கள் ஒரே மாதிரியாக உள்ளனவா?

All are not alike. Inspite of our colour, height or weight, each of us is unique. We just resemble our family members in our physical appearance. We should not tease or bully anyone for their appearance. Let us treat everyone with respect, love and affection.

Let us Do

Ask your parents and other members of your family whom they look like and note down in the given table.

S.No.	Family member	Whom do they resemble
1.		
2.		
3.		
4.		



Think and Discuss

Ask your parents about your relatives and fill this table.

Name of the relative	How you are related ?	What do you call them?

AP – SCERT

நாம் அனைவரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. நம் நிறம், உயரம் அல்லது எடை வேறுபட்டாலும் நாம் ஒவ்வொருவரும் சிறப்புத்தன்மை கொண்டவர்கள். உடல் தோற்றத்தில் நாம் நம் குடும்ப உறுப்பினர்களை போல இருக்கிறோம். நாம் மற்றவர்களின் தோற்றத்தைப் பார்த்து துன்புறுத்தவோ அல்லது கேலி செய்யவோ கூடாது. நாம் அனைவரிடமும் மரியாதை, அன்பு மற்றும் பாசம் காட்டுவோம்.

இதைச் செய்வோம்

உன் குடும்பத்திலுள்ள உன் பெற்றோர் மற்றும் மற்ற உறுப்பினர்கள் யாரைப் போல இருக்கிறார்கள் என்று அவர்களிடம் கேட்கவும். அதை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் நிரப்பவும்.

வ.எண்.	குடும்ப உறுப்பினர்	அவர்கள் யாரைப்போல உள்ளனர்
1.		
2.		
3.		
4.		



சிந்தித்து கலந்துரையாடு

உங்கள் உறவினர்களைப் பற்றி உங்கள் பெற்றோரிடம் கேட்டு இந்த அட்டவணையை நிரப்பவும்.

உறவினரின் பெயர்	நீங்கள் எவ்வாறு தொடர்புடையவர்?	நீங்கள் அவர்களை என்னவென்று அழைப்பீர்கள்?

AP SCERT

Key Words

family, grandparents, siblings, pet, resemble, professions, culture, home appliances.

What we have learnt ?

- We live in a family.
- A family may consist of grandparents, parents, siblings and pets.
- Every member of the family has a different role to play.
- We get love, care and support from our family.
- All professions should be respected.
- A village has people doing different kinds of work.
- Festivals enhances happiness among family members. Festivals bring all family members together in one place.
- We resemble someone in our family.
- Home appliances help in completing the work quickly.

AP – SCERT

Improve Your Learning

1. What is a family?
2. Name the members of your family?
3. We store milk and curd in this appliance. ( )

   A) fan B) cooler

   C) refrigerator D) mixer
4. What do we call a picture that shows family members using lines? ( )

   A) Map B) Chart

   C) Family flow chart D) Diagram
5. How do family members take care of each other?

முக்கியச் சொற்கள்

குடும்பம், தாத்தா, பாட்டி, உடன்பிறப்புகள், செல்லப்பிராணி, ஒத்திருத்தல், தொழில்கள், கலாச்சாரம், வீட்டு உபயோகப் பொருட்கள்



நாம் கற்றவை

- நாம் குடும்பத்தில் வாழ்கிறோம்.
- ஒரு குடும்பத்தில் தாத்தா பாட்டி, பெற்றோர்கள், உடன்பிறந்தவர்கள் மற்றும் செல்ல பிராணிகள் இருப்பர்.
- குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு தனிப்பட்ட பங்கு இருக்கும்.
- நம் குடும்பத்தின் மூலம் நாம் அன்பு, பராமரிப்பு மற்றும் ஆதரவு ஆகியவற்றை பெறுகிறோம்.
- அனைத்து தொழில்களுக்கும் மரியாதை செலுத்த வேண்டும்.
- ஒரு ஊரில் பல்வேறு வகையான வேலைகளைச் செய்யும் மக்கள் இருப்பர்.
- திருவிழாக்கள் குடும்ப உறுப்பினர்களிடையே மகிழ்ச்சியை மேம்படுத்துகின்றன. திருவிழாக்கள் அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் ஒரே இடத்தில் ஒன்றிணைக்கின்றன.
- நாம் நம் குடும்பத்தில் உள்ள ஒருவரைப் போலவே இருப்போம்.
- வீட்டு உபயோகப் பொருட்கள், வேலையை விரைவாக முடிக்க உதவுகின்றன.

AP – SCERT

கற்றலை மேம்படுத்துதல்

1. குடும்பம் என்றால் என்ன?
2. உங்கள் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் பெயர்களை எழுதுக.
3. நாம் இந்த சாதனத்தில் பால் மற்றும் தயிரை சேமித்து வைக்கிறோம்.

   a) மின்விசிறி b) குளிரூட்டி c) குளிர்சாதனப்பெட்டி d) மிக்சர்

4. குடும்ப உறுப்பினர்களை கோடுகள் பயன்படுத்திக் காட்டும் படத்தை நாம் என்னவென்று அழைப்போம்?

   a) வரைபடம் b) விளக்கப்படம் c) குடும்ப உறவுமுறை வரைபடம் d) படம்

5. குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு அக்கறை காட்டுகிறார்கள்?

6. Explain how people in the neighbourhood help us through their occupations.
7. Why do we use home appliances in our daily life?
8. Your mother is cooking food. Which home appliance will help her?
9. When your sister is sick, how can you show care as a family member?
10. **Match the following:**

Profession	**Work Place**
Teacher	
Doctor	
Farmer	
Shopkeeper	

AP – SCERT

6. அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தங்கள் தொழில்கள் மூலம் நமக்கு எவ்வாறு உதவுகிறார்கள் என்பதை விளக்குக.

7. நாம் ஏன் அன்றாட வாழ்க்கையில் வீட்டு உபயோகப் பொருட்களை பயன்படுத்துகிறோம்?

8. உங்கள் தாய் உணவு சமைக்கிறார். எந்த வீட்டு உபயோகப் பொருள் அவருக்க உதவும்?

9. உங்கள் சகோதரி நோய்வாய்ப்பட்டிருக்கும் போது ஒரு குடும்ப உறுப்பினராக நீங்கள் எப்படி அக்கறை காட்டுவீர்கள்?

10. **பொருத்துக :**

தொழில்	**வேலை செய்யும் இடம்**
ஆசிரியர்	
மருத்துவர்	
விவசாயி	
கடைக்காரர்	

AP – SCERT

11. Your family celebrates festivals together every year. How do you feel about this?

12. Hema respects and appreciates the work of a sweeper. Is this correct? Why?

13. Join the dots and colour the picture of a dog.

AP – SCERT

14. Write any two sentences on how your family members show love and care.

11. உங்கள் குடும்பம் ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைகளை ஒன்றாகக் கொண்டாடுகிறது. இதைப்பற்றி நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?

12. ஹேமா ஒரு துப்புரவாளரின் வேலையை மதிக்கிறார் மற்றும் பாராட்டுகிறார். இது சரியா? ஏன்?

13. புள்ளிகளை இணைத்து நாயின் படத்திற்கு வண்ணம் தீட்டுக.

AP – SCERT

14. உங்கள் குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு அன்பையும் அக்கறையும் காட்டுகிறார்கள் என்பது பற்றி ஏதேனும் இரண்டு வாக்கியங்களை எழுதவும்.



Lesson 2 Plants Around Us

Learning Outcomes

Pupils will be able to:

- Explain the need of plants. (CG- 4)
- Identify the parts of a plant. (CG-4)
- Give examples for different types of plants. (CG-1)
- Describe the functions of roots. (CG-4)
- Describe parts and functions of a leaf. (CG-4)
- Know about various uses of plants. (CG-4)
- Develop concern towards nature. (CG-4)

SCERT

On Geetha's birthday, Geetha and her brother Venu planted trees in the garden with the help of their parents. Next day while Geetha and Venu were watering the plants, Geetha got a doubt and asked her father (Nanna).

பாடம் 2

நம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள்

கற்றல் விளைவுகள்

மாணவர்கள் இவற்றை செய்வர்:

- தாவரங்களின் தேவையை விளக்குவர். (CG- 4)
- தாவரத்தின் பாகங்களை அறிந்துக்கொள்வர். (CG-4)
- பல்வேறு வகையான தாவரங்களுக்கு உதாரணங்கள் கூறுவர். (CG-1)
- வேர்களின் பணிகளை விவரிப்பர். (CG-4)
- இலைகளின் பாகங்கள் மற்றும் பணிகளை விவரிப்பர்.(CG-4)
- தாவரங்களின் பல்வேறு பயன்களைப் பற்றி அறிந்துக்கொள்வர். (CG-4)
- இயற்கையின் மீது அக்கறையை வளர்த்துக் கொள்வர். (CG-4)

SCERT

கீதாவின் பிறந்தநாளில், கீதாவும் அவளுடைய சகோதரன் வேணுவும் தங்கள் பெற்றோரின் உதவியுடன் தோட்டத்தில் மரக்கன்றுகளை நட்டனர். அடுத்த நாள், கீதாவும் வேணுவும் செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருக்கும்போது, கீதாவிற்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அதை அவள் தன் அப்பாவிடம் கேட்டாள்.

Geetha : Nanna! how does the plant take water from the soil ?

Nanna : Come Geetha! I will show you. Observe this tomato plant. It has roots, stem, leaves, flowers and fruits.



Parts of a plant

Every plant has different parts. Each part has a special function.

Root : Holds the plant into the soil and takes water from it.

Stem : Helps the plant stand straight and carries water to all parts.

Leaf : Makes food for the plant.

Flower : It is the beautiful part of the plant. It develops into fruit.

Fruit : Grows from the flower and has seeds inside.

Do You Know !

- Plants need air, water, sunlight, and soil to grow.
- Some plants give us fruits and vegetables.
- Some plants give us flowers and shade.



Think and Discuss

- Observe a tree near your house. Think and Discuss how it helps us in our daily life.
- Look at the plants around your school or home. Identify which plant gives fruits and which plant gives shade in your surroundings.

Activity:

Draw and label the parts of a plant.

AP-SCERT

கீதா : அப்பா! தாவரங்கள் தமக்கு தேவையான நீரை மண்ணிலிருந்து எவ்வாறு எடுத்துக் கொள்கிறது?

அப்பா : வா கீதா! நான் உனக்கு காட்டுகிறேன். இந்த தக்காளிச் செடியைப் பார். இது வேர்கள், தண்டு, இலைகள், பூக்கள் மற்றும் பழங்கள் ஆகிய பாகங்களை கொண்டுள்ளது.



தாவரத்தின் பாகங்கள்

ஒவ்வொரு தாவரத்திற்கும் வெவ்வேறு பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு சிறப்பான வேலை உண்டு.

வேர் : தாவரத்தை மண்ணில் நிலைநிறுத்துகிறது மற்றும் மண்ணிலிருந்து நீரை உறிஞ்சுகிறது.

தண்டு : தாவரம் நேராக நிற்க உதவுகிறது மற்றும் நீரை மற்ற அனைத்து பாகங்களுக்கும் கொண்டு செல்கிறது.

இலை : தாவரத்திற்குத் தேவையான உணவைத் தயாரிக்கிறது.

பூ : இது தாவரத்தின் அழகான பகுதி. இதுவே பழமாக மாறுகிறது.

பழம்: பூவிலிருந்து வளர்கிறது மற்றும் இதனுள் விதைகள் இருக்கும்.

உனக்கு தெரியுமா!

- தாவரங்கள் வளர்வதற்கு காற்று, நீர், சூரியஒளி மற்றும் மண் தேவை.
- சில தாவரங்கள் நமக்கு பழங்கள் மற்றும் காய்கறிகளை தருகின்றன.
- சில தாவரங்கள் நமக்கு பூக்கள் மற்றும் நிழலை தருகின்றன.

செயல் :

ஒரு தாவரத்தை வரைந்து அதன் பாகங்களை குறிக்கவும்.



சிந்தித்து கலந்துரையாடு

- உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு மரத்தைக் கவனியுங்கள். அது நமது அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு உதவுகிறது என்பதைப் பற்றிச் சிந்தித்து கலந்துரையாடுங்கள்.
- உங்கள் பள்ளி அல்லது வீட்டைச் சுற்றியுள்ள தாவரங்களை பாருங்கள். உங்கள் பகுதியில் எந்த தாவரம் பழங்களைத் தருகிறது மற்றும் எது நிழல் தருகிறது என்பதை கண்டறியுங்கள்.

AP SCERT

Roots :

Roots are the parts of a plant that grow under the ground.

Functions of roots :

1. Roots fix the plant into the soil. They hold the plant firmly in the ground.
2. Roots absorb water and nutrients from the soil for the plant to grow.
3. Some roots store food. For example, carrot, beetroot and radish.
4. Roots help plants to grow strong and healthy.

Let us Do

Collect and observe the roots of some plants. Do all the roots look alike? Discuss with your friends.

AP – SCERT

Geetha : Nanna, if the roots are so important, what is the use of a stem?

Nanna : The stem carries the water and nutrients from the root to all the other parts of a plant and supports it.

Geetha : Oh! The stem of this tomato plant is very thin and hairy. Nanna, do all the plants have same type of stems?

Nanna : No. Not alike.

Stem :

The stem is the main part of a plant that holds the plant upright and carries water, food, and minerals to all parts of the plant.

Types of stems : There are different types of stems. Some are soft and green, some are brown and hard. Some plants have thick stems and some plants have thin stems.

Let us Do

Observe the plants and trees given below. Read whether they have soft stem or hard stem.

வேர்கள் :

வேர்கள் என்பது நிலத்திற்கு அடியில் வளரும் தாவரத்தின் பாகங்கள் ஆகும்.

வேர்களின் வேலைகள் :

1. வேர்கள் தாவரத்தை மண்ணில் நிலைநிறுத்துகின்றன. அவை தாவரத்தை நிலத்தில் உறுதியாக பிடித்துக் கொள்கின்றன.
2. தாவரம் வளர்வதற்கு தேவையான நீர் மற்றும் ஊட்டச்சத்துகளை மண்ணிலிருந்து வேர்கள் உறிஞ்சுகின்றன.
3. சில வேர்கள் உணவைச் சேமித்து வைக்கின்றன. உதாரணமாக, கேரட், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி.
4. வேர்கள் தாவரங்கள் உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் வளர உதவுகின்றன.

இதைச் செய்வோம்

சில தாவரங்களின் வேர்களை சேகரித்து உற்றுநோக்கவும். எல்லா வேர்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா? உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

கீதா : அப்பா! வேர்கள் மிக முக்கியமான பாகம் எனில் தண்டுகளின் பயன் என்ன?

அப்பா : தண்டுகள் வேர்களிலிருந்து நீரையும், ஊட்டச்சத்துகளையும் தாவரத்தின் பிற பாகங்களுக்கு எடுத்துச் செல்லும். தாவரத்தின் பிற பாகங்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது.

கீதா : ஓஹோ! தக்காளி செடியின் தண்டு மிக மெல்லியதாகவும் மற்றும் முடியுடன் உள்ளன. அப்பா எல்லா தாவரங்களுக்கும் ஒரே மாதிரியான தண்டு இருக்குமா?

அப்பா : இல்லை. ஒரே மாதிரியாக இருக்காது.

தண்டு :

தண்டு என்பது தாவரத்தின் ஒரு முக்கிய பாகமாகும். இது தாவரத்தை நிமிர்த்தி பிடித்துக் கொள்கிறது. மேலும் நீர், உணவு மற்றும் தாதுக்களை தாவரத்தின் அனைத்து பாகங்களுக்கும் கொண்டு செல்கிறது.

தண்டுகளின் வகைகள் : தண்டுகளில் வெவ்வேறு வகைகள் உள்ளன. சில மென்மையாகவும் பச்சை நிறத்திலும் இருக்கும். சில பழுப்பு நிறத்திலும் கடினமாகவும் இருக்கும். சில தாவரங்களுக்கு தடிமனான தண்டுகள் மற்றும் சில தாவரங்களுக்கு மெல்லிய தண்டுகள் இருக்கும்.

இதைச் செய்வோம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள செடிகள் மற்றும் மரங்களை உற்றுநோக்கவும். அவற்றின் தண்டு மென்மையானதா அல்லது கடினமானதா என்று படிக்கவும்.

AP SCERT

Mango	Coconut	Watermelon	Coriander
			
Hard stem	Hard stem	Soft stem	Soft stem

As the plant grows bigger, the stem strengthens. These thick stems are called 'trunks'. The trunks of some trees are covered by bark.

Ex: Mango, Coconut, etc.

Types of Plants :

Herbs :

Herbs are very small plants with soft and green stems.

Examples: Coriander, Spinach, etc.

Methi

Lemongrass

Coriander

Spinach

AP – SCERT

Shrubs :

Shrubs are medium sized plants with several woody stems and branches growing close to the ground.

Examples : Rose, Hibiscus, etc.

Trees :

Trees have a big trunk of wood and many branches that spread out with leaves on them. Trees have roots that go deep down into the soil.

Examples: Banyan, Tamarind, Mango, Coconut, etc.

மாமரம்

கடினமான தண்டு ....

தென்னை மரம்

கடினமான தண்டு ....

தர்பூசணி



மென்மையான தண்டு ....

கொத்துமல்லி

மென்மையான தண்டு ....

தாவரம் பெரிதாக வளரும்போது, அதன் தண்டு வலிமை பெறுகிறது. இந்த தடிமனான தண்டுகள் மரத்தண்டுகள் என்று அழைக்கப்படுகின்றன. சில மரங்களின் மரத்தண்டு மரப்பட்டைகளால் மூடப்பட்டிருக்கும்.

உதாரணம்: மாமரம், தென்னை மரம் போன்றவை.

தாவரங்களின் வகைகள் :

சிறுசெடிகள் :

'சிறுசெடிகள்' என்பவை மென்மையான மற்றும் பச்சை நிறத் தண்டுகளைக் கொண்ட மிகச்சிறிய தாவரங்கள் ஆகும்.

உதாரணங்கள்: கொத்தமல்லி, பசலைக்கீரை.

வெந்தயக்கீரை

எலுமிச்சைப்புல்

கொத்தமல்லி

பசலைக்கீரை

புதர்கள்:

புதர்கள் என்பவை நடுத்தர அளவுள்ள தாவரங்கள். இவை தரையை ஒட்டி வளரும். பல மரக்கட்டைப் போன்ற தண்டுகள் மற்றும் கிளைகளை கொண்டவை.

உதாரணங்கள் : ரோஜா, செம்பருத்தி போன்றவை.

மரங்கள்:

மரங்கள் ஒரு பெரிய மரத்தண்டுப்பகுதி மற்றும் இலைகளுடன் கூடிய பரந்து விரிந்த பல கிளைகளை கொண்டுள்ளன. மரங்களின் வேர்கள் மண்ணிற்குள் ஆழமாகச் செல்லும்.

உதாரணங்கள்: ஆலமரம், புளியமரம், தென்னைமரம் போன்றவை.

AP – SCERT

Climbers :

Climbers are the plants that grow tall with support.

Examples: Grapevine, Bittergourd, etc.

Creepers :

Creepers are the plants with weak stems that creep on the ground.

Examples: Watermelon, Pumpkin, etc.

AP-SCERT

Activity

Tick (✓) in the suitable box.

Name of the plant	Trees	Shrubs	Herbs	Climbers	Creepers
Watermelon					
Rose					
Mango					
Bitter gourd					
Hibiscus					
Neem					

Amazing Facts :

Wolffia plant :

The world's smallest plant is Wolffia. This plant cleans polluted water by absorbing harmful chemicals like a sponge.

ஏறுகொடிகள் : 'ஏறுகொடிகள்' என்பது ஏதேனும் ஒன்றின் துணையுடன் உயரமாக வளரும் தாவரங்கள் ஆகும்.
உதாரணங்கள் : திராட்சை, பாகற்காய்.

படர்கொடிகள் : 'படர்கொடிகள்' என்பவை பலவீனமான தண்டுகளைக் கொண்டு தரையிலேயே படர்ந்து வளரும் தாவரங்கள் ஆகும்.
உதாரணங்கள் : தர்பூசணி, பூசணிக்காய் போன்றவை.

செயல் :

பொருத்தமான பெட்டியில் டிக் (✓) செய்யவும்..

தாவரத்தின் பெயர்	மரங்கள்	புதர்கள்	சிறுசெடிகள்	ஏறுகொடிகள்	படர்கொடிகள்
தர்பூசணி					
ரோஜா					
மாமரம்					
பாகற்காய்					
செம்பருத்தி					
வேப்பமரம்					

AP_SCERT

வியப்பூட்டும் உண்மைகள் :

வொல்பியா தாவரம் :
உலகின் மிகச்சிறிய தாவரம் வொல்பியா ஆகும். இந்த தாவரம் தீங்கு விளைவிக்கும் வேதிப்பொருட்களை, கடற்பஞ்சு போன்று உறிஞ்சி மாசுபட்ட நீரை தூய்மைப்படுத்துகிறது.

Geetha : Wow! There are so many types of stems. Why do plants have so many leaves Nanna?

Nanna : Just as you need food to grow, plants also need food. The leaves prepare food for the plant and help them to grow.

Observe the parts of a Leaf :





Think and Discuss

- Have you observed the leaves of different plants?
- Are all the leaves same in size, shape, colour and smell?

Different Types of leaves :

Banana	Tamarind	Coconut	Coriander
Hibiscus	**Croton**	**Tulsi**	**Papaya**

AP - SCERT

கீதா : அப்படியா! பலவகையான தண்டுகள் உள்ளன. தாவரங்கள் பல இலைகளையும் கொண்டுள்ளன. ஏன்?

அப்பா : நாம் வளர உணவு தேவைப்படுவது போன்று தாவரங்கள் வளரவும் உணவு தேவைப்படுகிறது. தாவரங்கள் வளர தேவையான உணவை இலைகள் தயாரிக்கின்றன.

இலையின் பாகங்களை கவனி :





சிந்தித்து கலந்துரையாடு

- வெவ்வேறு தாவரங்களில் உள்ள இலைகளை கவனித்தீர்களா?
- அனைத்து இலைகளும் அளவு, வடிவம், நிறம் மற்றும் மணத்தில் ஒன்றுபோல் உள்ளனவா?

வெவ்வேறு வகையான இலைகள் :

வாழை இலை	புளி இலை	தென்னை இலை	கொத்துமல்லி இலை
செம்பருத்தி இலை	**குரோட்டான் இலை**	**துளசி இலை**	**பப்பாளி இலை**

AP – SCERT

The leaves are of different sizes, shapes, colours and smell.

- The leaves of banana plant are very big.
- The leaves of hibiscus are broad and the margins are like a saw.
- The leaves of papaya plant look like palm.
- The leaves of coconut tree have long veins.
- The leaves of tamarind tree are very small.
- The leaves of pudina, coriander and tulsi have different aroma.

Activity:

- Collect some leaves and trace the shape in your project book. Colour the drawing and name them.

Let us Do

Make some toys with the locally available leaves. Some examples are shown here.

AP – SCERT







Note to the teacher : Guide and support the students while doing this activity.

இலைகள் வெவ்வேறு அளவுகள், வடிவங்கள், வண்ணங்கள் மற்றும் மணங்களை கொண்டவை.

- வாழைமரத்தின் இலைகள் மிகப்பெரியவை.
- செம்பருத்தி இலைகள் அகலமாகவும், வாள் போன்ற விளிம்புகளையும் கொண்டவை.
- பப்பாளி இலைகள் நமது உள்ளங்கை போன்று இருக்கும்.
- தென்னை மர இலைகள் (ஓலை) நீண்ட நரம்புகளை கொண்டிருக்கும்.
- புளி இலைகள் மிகச்சிறியதாக இருக்கும்.
- புதினா, கொத்துமல்லி மற்றும் துளசி இலைகள் வெவ்வேறு நறுமணங்களை கொண்டிருக்கும்.

செயல் :

- சில இலைகளைச் சேகரித்து, உங்கள் செயல்திட்டப் புத்தகத்தில் வைத்து, அதை சுற்றி கோடிட்டு அதன் வடிவத்தை வரைந்து, வண்ணம் தீட்டி அவற்றின் பெயரை எழுதுங்கள்.

இதைச் செய்வோம்

உங்களுக்கு அருகில் கிடைக்கும் இலைகளைக் கொண்டு சில பொம்மைகளை தயார் செய்யுங்கள். சில உதாரணங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.



AP SCERT

ஆசிரியருக்கான குறிப்பு : இந்த செயல்பாட்டைச் செய்யும்போது மாணவர்களுக்கு வழிகாட்டி உதவவும்.

Blindfold activity

Collect few leaves of lemon, mango, neem, tulsi, pudina and coriander. Blindfold a student and ask the student to do the following:

- Take some leaves, crush and smell them separately.
- Identify and say the name of the leaf.

Do they smell the same? Discuss with your friends.

Do you know how leaves are useful to us?

Uses of leaves :

We use leaves in many ways.

- We eat the leaves of many plants like coriander, curry leaves, drumstick leaves etc.
- We drink tea which is made from tea leaves.
- We use leaves of neem and tulsi as medicines.
- Leaves of banana tree, banyan tree and sal tree are used to make disposable plates and bowls to serve food.

SCERT

Let us Do

Grow a kitchen garden with the help of your teacher.



Think and Discuss

If there were no leaves on plants, what problems would we face? Discuss.

கண்களை மூடிக்கொண்டு செய்யும் செயல்பாடு :

எலுமிச்சை, மாம்பழம், வேம்பு, துளசி, புதினா மற்றும் கொத்துமல்லி இலைகளில் சிலவற்றைச் சேகரிக்கவும். ஒரு மாணவரின் கண்களைக் கட்டி, பின்வருவனவற்றைச் செய்யச் சொல்லுங்கள்:

- சில இலைகளை எடுத்து, அவற்றைத் தனித்தனியாக நசுக்கி நுகர்ந்து பார்க்கவும்.
- அந்த இலையின் பெயரைக் கண்டறிந்துக் கூறவும்.

அவை அனைத்தும் ஒரே மாதிரியான வாசனை கொண்டவையா? உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள். இலைகள் நமக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்று உங்களுக்கு தெரியுமா?

இலைகளின் பயன்கள் :

நாம் இலைகளைப் பல வழிகளில் பயன்படுத்துகிறோம்.

- கொத்துமல்லி, கறிவேப்பிலை, முருங்கை இலைகள் போன்ற பல தாவரங்களின் இலைகளை நாம் சாப்பிடுகிறோம்.
- தேயிலையிலிருந்து தயாரிக்கப்படும் 'தேநீரை' நாம் குடிக்கிறோம்.
- வேம்பு மற்றும் துளசி இலைகளை மருந்தாகப் பயன்படுத்துகிறோம்.
- உணவு பரிமாற ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் தட்டுகள் மற்றும் கிண்ணங்கள் தயாரிக்க வாழை மரம், ஆலமரம் மற்றும் சால் மரத்தின் இலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

SCERT

இதைச் செய்வோம்

உங்கள் ஆசிரியரின் உதவியுடன் ஒரு சமையலறைத் தோட்டம் வளர்க்கவும்.



சிந்தித்து கலந்துரையாடு

தாவரங்களில் இலைகளே இல்லையென்றால், நாம் என்னென்ன பிரச்சனைகளை எதிர்கொள்வோம்? கலந்துரையாடுங்கள்.

Uses of plants :

Plants are gifts of nature. There are many uses of plants. Plants give us food. We get fresh air from the plants. Plants absorb carbon dioxide and release oxygen which we breathe.

- Plants give us wood to make furniture and houses.
- Plants give medicine to cure diseases.
- Plants give us shade and help cool the surroundings.
- We get clothes like cotton from plants.
- Plants give us paper to write and read.
- We get oils like coconut oil from plants.



AP - SCERT

While having dinner, Geetha told her father about the parents' meeting. There a plant was distributed to every student on the name of mother. After dinner, she shows a card to her father (Nanna) and talks about it.

Geetha : Nanna, do you know what is this?

Nanna : What is this card Geetha?

Geetha : It is 'green passport'. I have to look after my plant and record it's growth in this green passport.



Nanna : You have to take care of the plant like your mother and I care about you.

Geetha : Sure, nanna.

தாவரங்களின் பயன்கள் :

தாவரங்கள் இயற்கையின் கொடை ஆகும். தாவரங்களால் பல பயன்கள் உள்ளன. தாவரங்கள் நமக்கு உணவை அளிக்கின்றன. தாவரங்களிடமிருந்து நமக்குத் தூய்மையான காற்று கிடைக்கிறது. தாவரங்கள் கார்பன்-டை-ஆக்சைடை உறிஞ்சி, நாம் சுவாசிப்பதற்கான ஆக்சிஜனை வெளியிடுகின்றன.

- வீடுகள் மற்றும் மரச்சாமான்கள் செய்வதற்குத் தேவையான மரக்கட்டைகளை தாவரங்கள் தருகின்றன.
- நோய்களை குணப்படுத்த தேவையான மருந்துகளை தாவரங்கள் தருகின்றன.
- தாவரங்கள் நமக்கு நிழலைத் தருகின்றன மற்றும் சுற்றுப்புறத்தைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன.
- பருத்தி போன்ற தாவரங்களிலிருந்து நமக்குத் தேவையான உடைகள் கிடைக்கின்றன.
- படிப்பதற்கு மற்றும் எழுதுவதற்கு தேவையான காகிதங்களை தாவரங்கள் தருகின்றன.
- தேங்காய் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகளை நாம் தாவரங்களிடமிருந்து பெறுகிறோம்.



AP-SCERT

இரவு உணவு சாப்பிடும்போது, கீதா தனது தந்தையிடம் பெற்றோர்கள் கூட்டம் பற்றி கூறினாள். அங்கு 'தாயின்' பெயரில் ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு செடி வழங்கப்பட்டது. இரவு உணவிற்குப் பிறகு, அவள் அந்த அட்டையைத் தன் தந்தையிடம் காட்டி அதைப்பற்றி பேசுகிறாள்.

கீதா : அப்பா, இது என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

அப்பா: இது என்ன அட்டை கீதா?

கீதா : இது 'பசுமை பாஸ்போர்ட்'. நான் எனது செடியைப் பார்த்த பிறகு அதன் வளர்ச்சியை இந்தப் பசுமை பாஸ்போர்டில் பதிவு செய்ய வேண்டும்.

அப்பா: உன்னையும் என்னையும் உன் அம்மா எப்படி பார்த்துக் கொள்கிறாரோ, அதேபோல் நீயும் இந்தச் செடியைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கீதா : சரி அப்பா.



Green passport

The green passport shows the details of the plant's name, scientific name, the date and place in which student planted the sapling.

Let us Know !

"Ek Ped Maa Ke Naam" means "One Tree in the Name of Mother." In this programme, students plant a tree to show love and respect for their mother. By planting a tree, we help our Earth become green and clean. It teaches us to care for nature just like our mother cares for us. Every child promises to protect the tree and watch it grow. This programme spreads the message that planting plants is a beautiful way to thank our mothers and save the environment.

Amazing facts :

Rafflesia

Banyan tree is the biggest tree in India.

Jack fruit is the biggest fruit in India.

Bamboo is the tallest grass.

Rafflesia is the biggest flower in the world .

The largest leaves found in India belong to the giant water lily (Victoria amazonica). The smallest fruit in India is Manila Tamarind.



Key Words

nutrients, veins, stem, creatures, living beings, minerals, environment, earth, aroma, green passport, kitchen garden.

AP SCERT

பசுமை பாஸ்போர்ட்

பசுமை பாஸ்போர்டில் செடியின் பெயர், அறிவியல் பெயர், மாணவர் அந்த செடியை நட்ட தேதி மற்றும் இடம் போன்ற விவரங்கள் இருக்கும்.

நாம் தெரிந்துகொள்வோம்!



"ஏக் பெட் மா கே நாம்" என்றால் "தாயின் பெயரில் ஒரு மரம்" என்று பொருள். இத்திட்டத்தில், மாணவர்கள் தங்கள் தாயின் மீதுள்ள அன்பு மற்றும் மரியாதையைக் காட்ட ஒரு மரக்கன்றை நடுகிறார்கள். மரம் நடுவது நமது பூமியை பசுமையாகவும் சுத்தமாகவும் மாற்ற உதவுகிறது. நமது தாய் நம்மை எப்படிப் பராமரிக்கிறாரோ, அப்படியே நாமும் இயற்கையைப் பராமரிக்க வேண்டும் என்று இது கற்றுக் கொடுக்கிறது. ஒவ்வொரு மாணவனும் அந்த மரக்கன்றை பாதுகாத்து வளர்ப்பேன் என உறுதிமொழி ஏற்றனர். மரக்கன்றை நடுவது என்பது நமது தாய்க்கு நன்றி தெரிவிப்பதற்கும் மற்றும் சுற்றுப்புறத்தையும் காக்க ஒரு சிறந்த வழி என்பதை இத்திட்டம் நமக்கு உணர்த்துகிறது.

AP SCERT

வியப்பூட்டும் உண்மைகள் :

ரஃப்லீசியா

இந்தியாவின் மிகப்பெரிய மரம்: ஆலமரம்.

இந்தியாவின் மிகப்பெரிய பழம்: பலாப்பழம்.

மிக உயரமான புல் வகை: மூங்கில்.

உலகின் மிகப்பெரிய மலர்: ரஃப்லீசியா.

இந்தியாவில் காணப்படும் மிகப்பெரிய இலை ராட்சத நீர் அல்லியின் இலை ஆகும். இந்தியாவின் மிகச்சிறிய பழம் மணிலா புளி (கொடுக்காபுளி) ஆகும்.



முக்கியச் சொற்கள்

ஊட்டச்சத்துகள், இலை நரம்புகள், தண்டு, உயிரினங்கள், தாதுக்கள், சுற்றுப்புறம், பூமி, நறுமணம், பசுமை பாஸ்போர்ட், சமையலறைத் தோட்டம்.

What we have learnt ?

- Roots, stem, leaves, flowers and fruits are the main parts of a plant.
- The roots are the most important parts of a plant. Roots fix the plant into the ground. They absorb nutrients and water from the soil.
- Stem carries the water and nutrients to all the parts of a plant, and it gives support to the plant.
- All the stems are not alike. The thick stems of trees are called trunks. The trunks are covered by bark.
- The leaves are of different sizes, shapes, and colours. All the leaves have veins. Leaves prepare food for the plant.

AP - SCERT

Improve Your Learning

1. Name any two plants you see in your surroundings.
2. Write the names of any two parts of a plant.
3. Name one tree and one herb.
4. Which part of the plant makes food?
5. Why do we need plants?
6. How do roots help the plant?
7. Explain the function of a leaf in a plant.
8. You feel hot while playing outside.Which plant part helps give shade and cool air? (   )

   A) Root   B) Leaf   C) Flower   D) Stem
9. A plant in a very small pot falls down easily.What is the reason? (   )

   A) Weak roots   B) Very big leaves

   C) Very big flowers   D) Green colour
10. Observe the leaves of two different plants near your home. Think and discuss how they are different.



நாம் கற்றவை

- வேர்கள், தண்டு, இலைகள், பூக்கள் மற்றும் பழங்கள் ஆகியவை தாவரத்தின் முக்கிய பாகங்களாகும்.
- வேர்கள் தாவரத்தின் மிக முக்கியமான பாகம் ஆகும். இவை தாவரத்தை நிலத்தில் நிலைநிறுத்துகின்றன. இவை மண்ணிலிருந்து ஊட்டச்சத்துகளையும் நீரையும் உறிஞ்சுகின்றன.
- தண்டு தாவரத்தின் அனைத்து பாகங்களுக்கும் ஊட்டச்சத்துகள் மற்றும் நீரை எடுத்துச் செல்கிறது. இது தாவரத்திற்கு ஆதாரத்தை அளிக்கிறது.
- எல்லா தாவரங்களின் தண்டுகளும் ஒன்றுபோல் இருக்காது. மரங்களின் பருத்த தண்டை மரத்தண்டு என்கிறோம். இத்தண்டுகள் மரப்பட்டையால் சூழப்பட்டிருக்கும்.
- வெவ்வேறு அளவுகள், வடிவங்கள் மற்றும் வண்ணங்களைக் கொண்ட இலைகள் உள்ளன. அனைத்து இலைகளும் நரம்புகளை கொண்டுள்ளன. இலைகள் தாவரங்களுக்கு தேவையான உணவை தயாரிக்கின்றன.

கற்றலை மேம்படுத்துதல்

AP SCERT

1. உங்கள் சுற்றுப்புறத்தில் நீங்கள் காணும் ஏதேனும் இரண்டு தாவரங்களின் பெயர்களை கூறுங்கள்.
2. தாவரத்தின் ஏதேனும் இரண்டு பாகங்களின் பெயர்களை எழுதுக.
3. ஒரு மரம் மற்றும் ஒரு சிறுசெடியின் பெயரைக் குறிப்பிடவும்.
4. தாவரத்தின் எந்தப்பகுதி உணவைத் தயாரிக்கிறது?
5. நமக்கு ஏன் தாவரங்கள் தேவை?
6. வேர்கள் தாவரத்திற்கு எவ்வாறு உதவுகின்றன?
7. ஒரு தாவரத்தில் இலையின் பணியை விளக்குங்கள்.
8. நீங்கள் வெளியே விளையாடும்போது வெப்பமாக உணர்கிறீர்கள். தாவரத்தின் எந்தப்பகுதி நிழல் மற்றும் குளிர்ந்த காற்றை தருகிறது? (   )

   A) வேர்   B) இலை   C) பூ   D) தண்டு
9. ஒரு மிகச்சிறிய தொட்டியில் இருக்கும் செடி எளிதில் கீழே விழுந்துவிடுகிறது. அதற்கு என்ன காரணம்? (   )

   A) பலவீனமான வேர்கள்   B) மிகப்பெரிய இலைகள்

   C) மிகப்பெரிய பூக்கள்   D) பச்சை நிறம்
10. உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள இரண்டு வெவ்வேறு தாவரங்களின் இலைகளைக் கவனியுங்கள். அவை எவ்வாறு வேறுபடுகின்றன என்று சிந்தித்து விவாதிக்கவும்.

11. Observe two plants — a tree and a climber.How are they different?

12. **Match the following:**

Function	**Plant Part**
Contains seeds	
Holds plant in soil	
Carries water	
Makes food	

AP – SCERT

13. A boy plucks leaves from a plant for fun. Is this right or wrong? Why?

14. Your friend throws garbage near plants. What will you tell him?

15. Draw and label any four parts of a plant.

11. ஒரு மரம் மற்றும் ஒரு ஏறுகொடி ஆகிய இரண்டையும் உற்றுநோக்குங்கள். அவை எவ்வாறு வேறுபடுகின்றன?

12. **பொருத்துக.**

வேலை	தாவரத்தின் பாகம்
விதைகளை கொண்டுள்ளது	
மண்ணில் தாவரத்தை நிலைநிறுத்துகிறது	
நீரை எடுத்துச் செல்கிறது	
உணவு தயாரிக்கிறது	

AP – SCERT

13. ஒரு சிறுவன் பொழுதுபோக்கிற்காக ஒரு செடியிலிருந்து இலைகளை பறிக்கிறான். இது சரியா அல்லது தவறா? ஏன்?

14. உனது நண்பன் செடிகளுக்கு அருகில் குப்பைகளை வீசுகிறான். அவனிடம் நீ என்ன கூறுவாய்?

15. ஒரு தாவரத்தின் ஏதேனும் நான்கு பாகங்களை வரைந்து காட்டுக.



Lesson 3

Animals Around Us

R1I7D2

Learning Outcomes

Pupils will be able to:

- List out the animals found in different places like their surroundings, zoo, etc. (CG- 1)
- Differentiate domestic and wild animals. (CG-1)
- List out the animals based on their movement. (CG-1)
- Classify animals based on their dwelling places. (CG-1)
- Identify the animals based on the food they eat. (CG-1)
- Appreciate the communication in animals. (CG-2)
- Appreciate plants and animals living together. (CG-2)
- Shows concern about nature. (CG-4)

During holidays Surya and his cousins went to a zoo along with their family members. They were excited when they observed animals like elephant, tiger, lion, cheetah.

<u>Have you ever visited a Zoo?</u>

Let us observe the picture of a Zoo:



- Name the birds and animals you see in this picture?
- Are these animals found in your surroundings?
- What animals do you see in your surroundings?
- Did you see these animals any time? Where did you see?

AP_SCERT

பாடம் 3 நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள்

S8B4M8

கற்றல் விளைவுகள்

மாணவர்கள் இவற்றை செய்வர்:

- தங்களின் சுற்றுப்புறம், விலங்கியல் பூங்கா போன்ற பல்வேறு இடங்களில் காணப்படும் விலங்குகளைப் பட்டியலிடுவர். (CG- 1)
- வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளை வேறுபடுத்துவர். (CG-1)
- விலங்குகளை அவற்றின் இயக்கத்தின் அடிப்படையில் பட்டியலிடுவர். (CG-1)
- விலங்குகளை அவற்றின் வாழும் இடங்களின் அடிப்படையில் வகைப்படுத்துவர். (CG-1)
- விலங்குகளை அவை உண்ணும் உணவின் அடிப்படையில் அடையாளம் காண்பர். (CG-1)
- விலங்குகளின் தகவல் பரிமாற்ற முறையை பாராட்டுவர். (CG-2)
- தாவரங்களும் விலங்குகளும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்வதை பாராட்டுவர். (CG-2)
- இயற்கைப் பற்றிய அக்கறையை வெளிப்படுத்துவர். (CG-4)

AP - SCERT

விடுமுறை நாட்களின் போது சூர்யா மற்றும் அவரது உறவினர்களும் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து ஒரு விலங்கியல் பூங்காவிற்கு சென்றார்கள். அவர்கள் யானை, புலி, சிங்கம், சிறுத்தைப்புலி போன்ற விலங்குகளை பார்த்த போது மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள்.

நீங்கள் எப்போதாவது விலங்கியல் பூங்காவிற்கு சென்றிருக்கிறீர்களா?

விலங்கியல் பூங்காவின் படத்தை நாம் கவனிப்போம் :



- இந்த படத்தில் நீங்கள் காணும் பறவைகள் மற்றும் விலங்குகளின் பெயர்களைக் கூறுங்கள்.
- இந்த விலங்குகள் உங்கள் சுற்றுப்புறத்தில் காணப்படுகிறதா?
- உங்கள் சுற்றுப்புறத்தில் நீங்கள் எந்தவிதமான விலங்குகளை காண்கிறீர்கள்?
- இந்த விலங்குகளை நீங்கள் எப்போதாவது பார்த்ததுண்டா? எங்கே பார்த்தீர்கள்?

Animals around us :

Tick (✓) in the correct box.

Animal name	Found in our surroundings	Found in the zoo
Dog		
Tiger		
Elephant		
Goat		
Cheetah		
Cow		

Animals and birds also live with us. There are different kinds of animals. Some live in our surroundings, can be tamed and taken care of. These are called **Domestic animals**.

Ex: Cat, dog, goat, buffalo, ox, cow, etc.

Domestic animals that live with us in our homes are **Pet animals**.

The animals that live in forest are called as **Wild animals**.

Ex : Lion, tiger, giraffe, elephant, fox, etc.

AP – SCERT

Domestic / Pet Animals

Dog

Goat

Horse

Cat

Camel

Rabbit


Donkey

Cow

Sheep

Wild Animals


Cheetah

Wolf

Lion

Zebra

Kangaroo


Elephant


Tiger

Hippo

Giraffe

நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள் :

சரியான பெட்டியில் டிக் (✓) குறியிடவும்.

விலங்கின் பெயர்	நம் சுற்றுப்புறத்தில் காணப்படும் விலங்குகள்	விலங்கியல் பூங்காவில் காணப்படும் விலங்குகள்
நாய்		
புலி		
யானை		
ஆடு		
சிறுத்தைப் புலி		
பசு		

AP – SCERT

விலங்குகளும் பறவைகளும் நம்முடன் வாழ்கின்றன. விலங்குகளில் பல வகைகள் உள்ளன. அவற்றில் சில நமது சுற்றுப்புறங்களில் வாழ்கின்றன. அவற்றை பழக்கப்படுத்தி பராமரிக்க முடியும். அவை **வீட்டு விலங்குகள்** என்று அழைக்கப்படுகின்றன.

உதாரணங்கள்: பூனை, நாய், ஆடு, எருமை, காளை, பசு போன்றவை.

நம் வீடுகளில் நம்முடன் வாழும் வீட்டு விலங்குகள் **செல்லப் பிராணிகள்** என்று அழைக்கப்படுகின்றன.

காடுகளில் வாழும் விலங்குகள் **காட்டு விலங்குகள்** என்று அழைக்கப்படுகின்றன.

உதாரணங்கள்: சிங்கம், புலி, வரிக்குதிரை, யானை, நரி போன்றவை.

வீட்டு விலங்குகள்/ செல்ல பிராணிகள்

நாய் ஆடு குதிரை

பூனை ஒட்டகம் முயல்

கழுதை பசு செம்மறி ஆடு

காட்டு விலங்குகள்

சிறுத்தை ஓநாய் சிங்கம்

வரிக்குதிரை கங்காரு யானை



புலி நீர்யானை ஒட்டகச்சிவிங்கி

Pet animals in our house not only help us but also give us happiness.

Terrestrial and Acquatic animals :

Activity:

Observe the pictures. Write how they move about.

Pigeon

Snake

Dog


Kangaroo

Tiger

Rabbit

Lizard

Monkey


Fish


Octopus

Frog

Crow

AP – SCERT

.........pigeon.........	and	.........crow.........	can fly
....	and	....	can crawl
....	and	....	can walk
....	and	....	can hop
....	and	....	can swim
....	and	....	can jump

Some animals walk, some crawl, some jump and some swim. Birds fly from one place to another. For this they use their legs, wings and even their tails. Fishes swim in water with the help of their fins and tails.

Let us recite the rhyme with action :

Run, run, run,
Run like a lion.
Swing, swing, swing,
Swing like a monkey.

Fly, fly, fly,
Fly like a parrot.
Crawl, crawl, crawl,
Crawl like a snake.

Paddle, paddle, paddle,
paddle like a turtle.
Stomp, stomp, stomp,
Stomp like an elephant.

நம் வீட்டில் உள்ள செல்லப்பிராணிகள் நமக்கு உதவுவதோடு மட்டுமல்ல, நமக்கு மகிழ்ச்சியும் அளிக்கின்றன.

நிலத்தில் வாழும் விலங்குகள் மற்றும் நீரில் வாழும் விலங்குகள் :

செயல்

கீழுள்ள படத்தை உற்றுநோக்கி அவை எவ்வாறு இடம்பெயருகின்றன என்பதை எழுது.

புறா

பாம்பு

நாய்

கங்காரு

புலி

முயல்

பல்லி

குரங்கு

மீன்


ஆக்டோபஸ்

தவளை

காகம்

பறப்பவை	:	புறா	மற்றும்	காகம்
ஊர்ந்து செல்பவை	:	....	மற்றும்	....
நடப்பவை	:	....	மற்றும்	....
தாவி செல்பவை	:	....	மற்றும்	....
நீந்துபவை	:	....	மற்றும்	....
குதித்து செல்பவை	:	....	மற்றும்	....

AP – SCERT

விலங்குகளில் சில நடக்கும், சில ஊர்ந்து செல்லும், சில தாவும், சில நீந்தும். பறவைகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பறந்து செல்லும். பறவைகள் அவற்றின் கால்கள், இறக்கைகள் மற்றும் வாலையும் பயன்படுத்தி பறக்கின்றன. மீன்கள் அவற்றின் துடுப்புகளையும் வாலையும் பயன்படுத்தி நீரில் நீந்துகின்றன.

வாருங்கள், பாடி நடனமாடுவோம்!

ஓடு, ஓடு, ஓடு,
சிங்கம் போல ஓடு.
ஊசலாடு, ஊசலாடு, ஊசலாடு,
குரங்கு போல ஊசலாடு.

பற, பற, பற,
கிளி போல பற.
ஊரு, ஊரு, ஊரு,
பாம்பு போல ஊரு.

துடுப்பு அடி, துடுப்பு அடி, துடுப்பு அடி,
ஆமை போல துடுப்பு அடி.
தடம் போடு, தடம் போடு, தடம் போடு,
யானை போல தடம் போடு.

My Home Activity :

Write the names of animals according to the places they live.

(Cow, sparrow, owl, frog, fish, grasshopper, dolphin, monkey)

Live on land	Live in water	Live both on land and in water

Animals live in different places. Some animals live on trees, some in water, and some on land. Generally birds live in nests. The animals that live on land are called **terrestrial animals.**

- Cow, dog, cat, hen etc., live on land.
- Crow, sparrow, owl, monkey, grasshoppers, etc., live on trees.
- The animals that live in water are called **Aquatic animals**.
  Ex. Fish, prawns, etc.
- Some animals like frog, crocodile and tortoise live both on land and in water.

Frog

Crocodile

Tortoise

Let Us Know !

The animals that live both on land and in water are called **amphibians**. Their moist skin, webbed feet, strong hind limbs help them to live on land and in water.

AP SCERT

என் வீடு செயல் :

கீழுள்ள அட்டவணையில் விலங்குகள் வாழும் இடத்தை பொறுத்து அவற்றின் பெயர்களை எழுதவும். (பசு, சிட்டுக்குருவி, ஆந்தை, தவளை, மீன், வெட்டுக்கிளி, டால்பின், குரங்கு)

நிலத்தில் வாழ்பவை	நீரில் வாழ்பவை	நிலம் மற்றும் நீர் இரண்டிலும் வாழ்பவை

விலங்குகள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றன. சில விலங்குகள் மரத்திலும், சில விலங்குகள் நீரிலும் மற்றும் சில விலங்குகள் நிலத்திலும் வாழ்கின்றன. பொதுவாக பறவைகள் கூடுகளில் வாழ்கின்றன. நிலத்தில் வாழும் விலங்குகள் **நில வாழ் உயிரினங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

- பசு, நாய், பூனை, கோழி போன்ற விலங்குகள் நிலத்தில் வாழ்கின்றன.
- காகம், குருவி, ஆந்தை, குரங்கு, வெட்டுக்கிளி போன்றவை மரத்தில் வாழ்கின்றன.
- நீரில் வாழும் விலங்குகள் **நீர்வாழ் உயிரினங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

  உதாரணம்: மீன்கள், இறால் போன்றவை.
- தவளை, முதலை, ஆமை போன்ற சில விலங்குகள் நிலத்திலும் நீரிலும் வாழ்கின்றன.

தவளை



முதலை

ஆமை

நாம் தெரிந்துக்கொள்வோம் !

நிலத்திலும், நீரிலும் வாழக்கூடிய விலங்குகள் **நீர்நில வாழ்வன** எனப்படுகின்றன. அவை நீரிலும், நிலத்திலும் வாழ அவற்றின் ஈரப்பதமான தோல், வலைப்பின்னல் போன்ற பாதங்கள், உறுதியான பின்னங்கால்கள் உதவுகின்றன.

Let us know about animal shelters :

A lion lives in a den, birds live in nests, snakes and rats live in burrows, a monkey lives on a tree. The farm animals live in their shelters made by human being. Some animals are kept in the zoo.

Nest



Shed

Burrow

Food for animals :

We eat food when we are hungry. Do you know what different animals eat?

Herbivores :

Animals which eat only plants are called **Herbivores.**

Eg : Cows, buffaloes, donkeys, horses, elephants, deers, etc,.

Sheep



Cow

Carnivores :

Tigers, lions, foxes and crocodiles eat the meat of other animals. These animals are called **Carnivores**.

Wolf



Whale

Lion

AP – SCERT

விலங்குகளின் வாழ்விடம் பற்றி அறிந்துக் கொள்வோம் :

சிங்கம் குகையில் வாழும், பறவைகள் கூடுகளில் வாழும், பாம்புகளும் எலிகளும் வளைகளில் வாழும். குரங்குகள் மரத்தில் வாழும். பண்ணை விலங்குகள் மனிதனால் உருவாக்கப்பட்ட தங்குமிடங்களில் வாழ்கின்றன. சில விலங்குகள் உயிரியல் பூங்காவில் வளர்க்கப்படுகின்றன.

கூடு



கொட்டகை

வளை

விலங்குகளின் உணவுகள் :

நமக்கு பசிக்கும் போது உணவு உண்போம். வெவ்வேறு விலங்குகள் என்ன சாப்பிடுகின்றன என்று உங்களுக்கு தெரியுமா?

தாவர உண்ணிகள் :

தாவரங்களை மட்டும் உண்ணும் விலங்குகளை தாவர உண்ணிகள் என்பர்.

உதாரணம் : பசுக்கள், எருதுகள், கழுதைகள், குதிரைகள், யானைகள், மான்கள் போன்றவை.

செம்மறி ஆடு



பசு

புலால் உண்ணிகள்/ ஊனுண்ணிகள் :

புலி, சிங்கம், நரி மற்றும் முதலை போன்ற விலங்குகள் மற்ற விலங்குகளின் மாமிசத்தை உண்கின்றன. இந்த விலங்குகள் புலால் உண்ணிகள் எனப்படுகின்றன.

ஓநாய்



திமிங்கலம்

சிங்கம்

AP SCERT

Omnivores :

Bears, crows and dogs eat both plants and animals. These animals are called **Omnivores**.

Bear

Crow

Dog

Amazing facts :

Butterflies and honeybees suck nectar from flowers.

Honey bee


Vulture

Vultures, crows and foxes consume dead animals. They are called **Natural scavengers.**

AP – SCERT

1. Suresh saw a cow eating grass and leaves in the field. Is the cow eating food from plants or animals?
2. Do you eat leaves of plants ?

Activity :

Match the animals with their food

அனைத்துண்ணிகள் :

கரடிகள், காகங்கள் மற்றும் நாய்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் இரண்டையும் உண்கின்றன. இவை போன்ற விலங்குகளை அனைத்துண்ணிகள் என்பர்.

கரடி

காகம்

நாய்

வியப்பூட்டும் உண்மைகள் :

வண்ணத்துப் பூச்சிகளும், தேனீக்களும் பூக்களிலுள்ள தேனை உறிஞ்சுகின்றன.

தேனீ


கழுகு

கழுகு, காகம் மற்றும் நரி இறந்த விலங்குகளின் மாமிசத்தை உண்கின்றன. எனவே இவற்றை **இயற்கை துப்புரவாளர்கள்** என்று அழைக்கிறோம்.

1. சுரேஷ் வயலில் புல் மற்றும் இலைகளை உண்ணும் பசுவை கண்டான். அந்த பசு தாவரத்திலிருந்து கிடைக்கும் உணவை உண்கிறதா? அல்லது விலங்கிலிருந்து கிடைக்கும் உணவை உண்கிறதா?
2. நீங்கள் கீரைகளை உண்கிறீர்களா?

செயல் :

விலங்குகளை அவற்றின் உணவோடு பொருத்தவும்.



AP – SCERT

Communication in animals :

Animals use sounds ,smells and body movements to share important information.

Examples :

1. Birds sing to protect their homes and find friends.
2. Dogs wag their tails to show they are happy.
3. Honeybees perform a special dance to tell the other bees exactly where the flowers are.

This communication helps animals stay safe, find food, and take care of their families.

Let's Discuss :

Have you ever heard the sounds of ?

The calf mooing when it sees the cow.

The cuckoo answering to other cuckoos.

The lizard squeaking in your home.

Birds :

Birds are one of the most interesting creatures on the earth. They have feathers, wings, and a beak. They are egg-laying creatures.

Birds around us :

We see birds like crows, ducks, hens, sparrows, parrots, and pigeons in our surroundings every day.

AP-SCERT

Crow

Sparrow



Hen

Pigeon

These birds live around us because they find food, water, and shelter near human shelters and trees.

விலங்குகளில் தகவல் பரிமாற்றம் :

விலங்குகள் முக்கியமான தகவல்களை பரிமாறிக்கொள்ள ஒலிகள், வாசனைகள் மற்றும் உடல் இயக்கங்களை பயன்படுத்திக் கொள்கின்றன.

உதாரணம் :

1. பறவைகள் தங்கள் கூடுகளை காப்பாற்றிக் கொள்ளவும், நண்பர்களை கண்டுகொள்ளவும் பாடுகின்றன.
2. நாய்கள் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதை தெரியப்படுத்த தனது வாலை ஆட்டுகிறது.
3. தேனீக்கள் பூக்கள் இருக்குமிடத்தை மற்ற தேனீக்களுக்கு தெரியப்படுத்த ஒரு சிறப்பு நடனம் ஆடுகின்றன.

இவ்வித தகவல் பரிமாற்றங்களால் விலங்குகள் பாதுகாப்பாக இருக்க முடிகிறது. உணவுகளை கண்டறிய முடிகிறது மற்றும் தன் குடும்ப உறுப்பினர்களை பார்த்துக்கொள்ள முடிகிறது.

நாம் கலந்துரையாடுவோம் :

நீங்கள் எப்போதாவது இந்த ஒலிகளை கேட்டுள்ளீர்களா?

பசுவை பார்க்கும்போது கன்று கதறுவது.

குயில் மற்ற குயில்களுக்கு கூறும் பதில்.

பல்லி உங்கள் வீட்டில் எழுப்பும் ஒலி.

பறவைகள் :

பறவைகள் பூமியில் உள்ள மிகவும் ஆர்வமூட்டும் உயிரினங்களில் ஒன்றாகும். அவைகளுக்கு இறகுகள், இறக்கைகள் மற்றும் அலகு உள்ளது. அவை முட்டையிடும் உயிரினங்களாகும்.

நம்மைச் சுற்றியுள்ள பறவைகள் :

நம் சுற்றுப்புறத்தில் தினந்தோறும் காகங்கள், வாத்துகள், கோழிகள், குருவிகள், கிளிகள் மற்றும் புறாக்கள் போன்ற பறவைகளை காண்கிறோம்.

காகம்

குருவி



கோழி

புறா

இந்தப் பறவைகள் மனிதர்களின் வாழ்விடங்களுக்கும், மரங்களுக்கும் அருகில் உணவு, தண்ணீர் மற்றும் தங்கும் இடம் கிடைப்பதால் நம்மைச் சுற்றி வாழ்கின்றன.

AP SCERT

Activity :

Sounds of Birds

- Close your eyes and try to listen carefully. Do you hear any bird sounds?
- Put your hands behind ears like in the picture. Can you hear the sounds better now?

Different birds, different sounds :

- Think about sounds you heard. Make sounds that different birds make.
- If you do not hear any sounds of birds, what do you think is the reason?
- What time do you hear bird sounds mostly? Why?

Birds leave their homes early in groups in the morning in search of food and return in groups again in the evening. At that time they make more sounds for communic - ation.

Amazing facts :

Ostrich is the biggest bird on the earth and Hummingbird is the smallest bird.

AP SCERT

செயல்

பறவைகளின் ஒலிகள்

- கண்களை மூடிக்கொண்டு கவனமாகக் கேட்க முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு ஏதேனும் பறவையின் சத்தங்கள் கேட்கிறதா?
- படத்தில் காண்பித்தவாறு உங்கள் கைகளை காதுகளின் பின்னால் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது உங்களால் சத்தங்களை நன்றாகக் கேட்க முடிகிறதா?

வெவ்வேறு பறவைகள், வெவ்வேறு ஒலிகள் :

- நீங்கள் கேட்ட ஒலிகளை பற்றி சிந்தியுங்கள். வெவ்வேறு பறவைகள் எழுப்பும் ஒலிகளை எழுப்புங்கள் .
- நீங்கள் பறவைகளின் ஒலிகளை கேட்கவில்லை எனில் அதற்கு காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?
- நீங்கள் அதிகமாக எந்த நேரங்களில் பறவைகளின் ஒலிகளை கேட்பீர்கள்? ஏன்?

பறவைகள் உணவிற்காக காலைவேளையில் தமது கூடுகளிலிருந்து கூட்டமாக கிளம்பி மறுபடியும் மாலைவேளையில் கூட்டமாக திரும்பி வருகிறது. அந்த வேளைகளில் அவை தகவல் பரிமாற்றத்திற்காக அதிகமான ஒலிகளை எழுப்புகிறது.

வியப்பூட்டும் உண்மைகள் :

பூமியில் மிகப்பெரிய பறவை நெருப்புக்கோழி மற்றும் மிகச்சிறிய பறவை ரீங்கார பறவை.

Plants Animals and Birds living together :

We read about different plants and animals. Have you noticed how these live together? Look carefully and you will find that there are lot of animals living on, around and even underneath the plants that you see.

Here are some pictures of animals living together with plants.

Goat eating leaves

Elephants eating plants

A woodpecker on a tree trunk



A butterfly sucking nectar from a flower



Camels eating leaves of plants

Owls stay in trees

தாவரங்கள் விலங்குகள் மற்றும் பறவைகள் ஒன்றாக வாழ்கின்றன :

நாம் வெவ்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பற்றி படித்தோம். இவை எவ்வாறு இணைந்து வாழ்கின்றன என்பதை எப்போதாவது கவனித்தீர்களா? நீங்கள் கவனமாக உற்றுநோக்கினால் தாவரங்களின் மீதும், அவற்றை சுற்றியும் மற்றும் அவற்றின் கீழேயும் அதிகமான உயிரினங்கள் வாழ்வதை காணலாம்.

தாவரங்களோடு இணைந்து வாழும் விலங்குகளின் சில படங்கள் இங்கே உள்ளன.

ஆடு இலைகளை உண்கிறது

யானை தாவரங்களை உண்ணுகிறது

மரங்கொத்தி பறவை மரத்தண்டின் மேல் உள்ளது.



ஒரு வண்ணத்துப்பூச்சி மலரிலிருந்து தேனை உறிஞ்சுகிறது.



ஒட்டகங்கள் தாவர இலைகளை உண்ணுகிறது.

ஆந்தைகள் மரப்பொந்துகளில் வாழ்கின்றன.

AP SCERT



Honeybee sucking nectar from a flower

Earthworm making the soil soft

Note to the Teacher : Animals help plants by spreading seeds for reproduction and making soil fertile through their waste.

All living beings are important to maintain the balance in the environment. But now a days the number of wild animals and birds is decreasing due to deforestation, hunting, pollution, climate changes. If we want to live in harmony with nature, we must protect them.

Let us Do

A gesture of kindness :

We can keep a small bowl of clean water and some grains outside our house. Birds and small animals often come in search of food and water, especially during hot days. By keeping water and grains, we can help them stay healthy and safe. This small act of kindness shows that we care for all living beings around us.

Sparrow

Birds and animals – State and National symbols.

Our national bird – Peacock

Our national animal- Royal Bengal tiger



தேனீ மலரிலிருந்து தேனை உறிஞ்சுகிறது.

மண்புழு மண்ணை மென்மையாக்குகிறது.

ஆசிரியர்கள் கவனத்திற்கு : விலங்குகள் விதைகளை பரப்புவதன் மூலம் தாவர இனப்பெருக்கத்திற்கு உதவுகின்றன. மேலும் அவற்றின் கழிவுகள் மூலம் மண்ணை வளம்பெறச் செய்கின்றன.

சுற்றுச்சூழலின் சமநிலையை பாதுகாக்க அனைத்து உயிரினங்களும் முக்கியமானவை. தற்காலத்தில் காடழிப்பு, வேட்டையாடல், மாசுபாடு, காலநிலை மாற்றங்கள் காரணமாக காட்டு விலங்குகள் மற்றும் பறவைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இயற்கையுடன் இணக்கமாக/ ஒற்றுமையாக வாழ விரும்பினால் நாம் அவற்றை பாதுகாக்க வேண்டும்.

இதைச் செய்வோம்

கருணையுடன் செய்யும் செயல் :

நம் வீட்டிற்கு வெளியே சுத்தமான தண்ணீர் கொண்ட ஒரு பாத்திரத்தையும், சில தானியங்களையும் வைக்கலாம். குறிப்பாக, கோடை நாட்களில் பறவைகள் மற்றும் சிறிய விலங்குகள் உணவு மற்றும் தண்ணீரை தேடி அடிக்கடி வருகின்றன. நாம் தானியம் மற்றும் தண்ணீரை வைப்பதன் மூலம் அவற்றை நலமாகவும் பாதுகாப்பாகவும் வைக்க உதவலாம். இந்த மாதிரியான கருணையுடன் செய்யும் செயல் நம்மைச் சுற்றியுள்ள விலங்குகளின் மீது நமது அக்கறையை வெளிப்படுத்துகிறது.

குருவி

பறவைகள் மற்றும் விலங்குகள் – மாநில மற்றும் தேசிய சின்னங்கள்.

நமது தேசிய பறவை – மயில்

நமது தேசிய விலங்கு – வங்கப்புலி

AP SCERT

Our state bird- Parrot

Our state animal - Black buck

Key Words

Zoo, animals, birds, insects, wild animals, domestic animals, herbivores, carnivores, omnivores, terrestrial, aquatic animals, amphibians, communicate.

AP - SCERT

What we have learnt ?

- Animals and birds live with us in this world.
- Animals are of two types: domestic and wild.
- Animals walk, crawl, jump, fly and swim to move from one place to another.
- Animals live on land and in water.
- Animals eat different types of food.
- Birds make different types of sounds to communicate with other birds.
- Animals make different sounds to communicate.
- People should have concern towards animals and birds.

நமது மாநில பறவை – பச்சைக்கிளி

நமது மாநில விலங்கு – வெளிமான்

AP – SCERT

முக்கியச் சொற்கள்

விலங்கியல் பூங்கா, விலங்குகள், பறவைகள், பூச்சிகள், காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள், தாவர உண்ணிகள், ஊனுண்ணிகள், அனைத்துண்ணிகள், நிலவாழ் உயிரினங்கள், நீர்வாழ் உயிரினங்கள், நீர்நில வாழ்வன, தகவல் பரிமாற்றம்.

நாம் கற்றவை

- இவ்வுலகில் நம்முடன் விலங்குகளும், பறவைகளும் வாழ்கின்றன.
- விலங்குகள் இரண்டு வகைப்படும். அவை காட்டு விலங்குகள் மற்றும் வீட்டு விலங்குகள்.
- விலங்குகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நடந்தும், ஊர்ந்தும், குதித்தும், பறந்தும், நீந்தியும் செல்கின்றன.
- விலங்குகள் நிலத்திலும், நீரிலும் வாழ்கின்றன.
- விலங்குகள் வெவ்வேறு வகையான உணவுகளை உண்கின்றன.
- பறவைகள் மற்ற பறவைகளுடன் தகவல் பரிமாற்றிக்கொள்ள விதவிதமான ஒலிகளை எழுப்புகின்றன.
- விலங்குகள் தகவல் பரிமாறிக் கொள்ள வெவ்வேறு ஒலிகளை எழுப்புகின்றன.
- மக்கள் விலங்குகளின் மீதும், பறவைகளின் மீதும் அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

Improve Your Learning

1. Write the names of two animals found in a zoo.
2. Name one domestic animal and one wild animal.
3. Write the name of one animal that flies.
4. What is the difference between domestic animals and wild animals?
5. How do animals move from one place to another?
6. What kind of food do herbivorous animals eat?
7. How do animals communicate with each other?
8. A cow lives near our house and gives us milk.Which type of animal is it?

   A) Wild animal B) Domestic animal ( )

   C) Aquatic animal D) Aerial animal
9. Your friend feeds grass to a goat. What type of eater is the goat?
10. Group the animals based on movement:

    Snake, Bird, Fish, Horse

    Crawling : ....

    Flying :..........................

    Swimming : ....

    Running : ....
11. A child throws stones at birds.Is this right or wrong? Why?
12. Which is better for nature? ( )

    a) Cutting trees and forests

    b) Protecting plants and animals

    Give one reason.

AP_SCERT

கற்றலை மேம்படுத்துதல்

1. உயிரியல் பூங்காவில் காணப்படும் இரண்டு விலங்குகளின் பெயர்களை எழுதுக.
2. ஒரு வீட்டு விலங்கின் பெயரையும், ஒரு காட்டு விலங்கின் பெயரையும் எழுதுக.
3. பறக்கக் கூடிய ஒரு விலங்கின் பெயரை எழுதுக?
4. வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளுக்கு இடையே உள்ள வேறுபாடு என்ன?
5. விலங்குகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வாறு இடம்பெயருகின்றன?
6. தாவர உண்ணிகள் எந்த வகையான உணவினை உண்கிறது?
7. விலங்குகள் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்பு கொள்கின்றன?
8. பசு நமது வீட்டிற்கு அருகே வாழ்கிறது. மேலும் நமக்கு பால் தருகிறது. இது எவ்வகையான விலங்கு? (   )

   A) காட்டு விலங்கு B) வீட்டு விலங்கு

   C) நீர்வாழ் விலங்கு D)) பறக்கும் விலங்கு
9. உன் நண்பன் ஆட்டிற்கு புல்லை வைக்கிறான். ஆடு எந்தவிதமான உணவை உண்ணும் விலங்கு?
10. இயக்கங்களின் அடிப்படையில் விலங்குகளை வகைப்படுத்துக:

    பாம்பு, பறவை, மீன், குதிரை

    ஊர்ந்து செல்பவை : ....

    பறந்து செல்பவை : ....

    நீந்திச் செல்பவை : ....

    ஓடிச் செல்பவை : ....

11 ஒரு சிறுவன் பறவைகளின் மீது கற்களை எறிகிறான். இது சரியா அல்லது தவறா? ஏன்?

12. இயற்கைக்கு சிறந்தது எது? (   )

    a) மரங்கள் மற்றும் காடுகளை அழிப்பது

    b) தாவரங்கள் மற்றும் விலங்குகளை பாதுகாத்தல்

    ஒரு காரணம் கூறு.

AP_SCERT

13. Colour the given picture.



14. Make a slogan on "Save Animals".

15. Observe your surroundings and list out the terrestrial and aquatic animals.

S.No.	Terrestial animals	Aquatic animals

AP SCERT

13. கொடுக்கப்பட்ட படத்திற்கு வண்ணம் தீட்டுக.



14. 'விலங்குகளை காப்பாற்றுங்கள்' என்ற தலைப்பில் ஒரு முழக்கத்தை உருவாக்கு.

15. உங்கள் சுற்றுப்புறத்தை உற்றுநோக்கி நிலவாழ் மற்றும் நீர்வாழ் விலங்குகளை வகைப்படுத்துக.

வ.எண்.	நிலவாழ் விலங்குகள்	நீர்வாழ் விலங்குகள்

AP - SCERT



Lesson 4

Our Body

K2F4V6

Learning Outcomes

Pupils will be able to:

- Identify and name the parts of body. (CG-1)
- Describe the importance of sense organs. (CG-3)
- Understand the concept of healthy body. (CG-3)
- Describe healthy habits like brushing teeth washing hands etc. (CG-3)
- Know about differently abled. (CG-4)
- Differentiate good and bad touch. (CG-3)
- Know how to avoid bad touch. (CG-3)

Teacher : Good morning students.

Students : Good morning ma'am.

Teacher : Today we will learn about the parts our body. Can you tell some of the names of our body parts?

Students : Head, eyes, ears, hands, legs, fingers.

Teacher : Now, let us recite the rhyme with action.

AP – SCERT

Rhyme :

Parts of my body

Two little eyes to see, see, see,
Two little ears to hear, hear, hear,
One little nose to breathe and smell.



Two little feet to walk, walk, walk,
Ten little toes to tap, tap, tap,
Two little hands to clap, clap, clap,
Ten little fingers to snap, snap, snap.



நமது உடல்

கற்றல் விளைவுகள்

மாணவர்கள் இவற்றை செய்வர்:

- உடல் உறுப்புகளை அடையாளம் கண்டு பெயரிடுவர். (CG-1)
- ஐம்புலன்களின் முக்கியத்துவத்தை விவரிப்பர். (CG-3)
- ஆரோக்கியமான உடலைப் பற்றிய கருத்தை புரிந்து கொள்வர். (CG-3)
- பல் துலக்குதல், கை கழுவுதல் போன்ற ஆரோக்கியமான பழக்கங்களை விவரிப்பர். (CG-3)
- மாற்றுத் திறனாளிகள் பற்றி அறிந்து கொள்வர். (CG-4)
- நல்ல தொடுதல் மற்றும் தீய தொடுதல்களை வேறுபடுத்தி அறிவர். (CG-3)
- தீய தொடுதலை எவ்வாறு தவிர்ப்பது என்பதை அறிந்து கொள்வர். (CG-3)

ஆசிரியர் : காலை வணக்கம் குழந்தைகளே.

மாணாக்கர்: காலை வணக்கம் அம்மா.

ஆசிரியர் : இன்று நாம் நமது உடல் உறுப்புகளைப் பற்றிப் படிக்கப் போகிறோம். நமது உடல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களை உங்களால் சொல்ல முடியுமா?

மாணாக்கர்: தலை, கண்கள், காதுகள், கைகள், கால்கள், விரல்கள்.

ஆசிரியர் : உடல் உறுப்புகளைப் பற்றி ஒரு சிறிய பாடலை நாம் அனைவரும் அபிநயத்துடன் பாடலாம்.

பாடல் –

AP – SCERT

எனது உடல் உறுப்புகள்

இரண்டு சிறிய கண்கள் பார் பார் பார்
இரண்டு சிறிய செவிகள் கேள் கேள் கேள்
ஒற்றை சிறிய மூக்கு சுவாசி மற்றும் நுகர்,



இரண்டு சிறிய கால்கள் நட நட நட
பத்து சிறிய கால் விரல்கள் மிதி மிதி மிதி,
இரண்டு சிறிய கைகள் தட்டு தட்டு தட்டு,
பத்து சிறிய விரல்கள் சொடக்கு போட்டு சொல்லு
நான் ஒரு ஸ்டார், நான் ஒரு ஸ்டார்.



Can you name some parts of your body?



- What parts do you look at when you see your face in the mirror?

Our body consists of different parts. These parts help us to do different things. Basically, our body is divided into three parts. They are head, trunk and limbs (hands and legs).



Think and Discuss

1) Observe the picture.
2) Can you tell the importance of these parts?



Look at the pictures.

Let children identify the body parts involved in each action and say it aloud.

1

2

3

AP SCERT

உடலில் உள்ள சில உறுப்புகளின் பெயர்களை உன்னால் கூற முடியுமா?



- உங்கள் முகத்தை கண்ணாடியில் பார்க்கும்போது நீங்கள் எந்தெந்த உறுப்புகளை பார்க்கிறீர்கள்?

நமது உடல் வெவ்வேறு பாகங்களை கொண்டுள்ளது. இப்பாகங்கள் வெவ்வேறு செயல்களை செய்ய உதவுகின்றன. பொதுவாக நமது உடலானது தலை, முண்டம், கை கால்கள் என மூன்று முக்கிய பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.



சிந்தித்து கலந்துரையாடு

1) படத்தை கவனி.
2) இப்பாகங்களின் முக்கியத்துவத்தை உன்னால் கூற முடியுமா?



கீழுள்ள படங்களைப் பார்.

ஒவ்வொரு செயலிலும் பங்கு பெறும் உடல் பாகங்களை மாணவர்கள் கண்டறிந்து, பின் உரக்க கூற வேண்டும்.

1

2

3

AP - SCERT

Look at these pictures.

- What are these children doing?
- How do you clap?
- What activities can we do with our hands?
- What activities can we do with our legs?

Functions of body parts :

We have eyes, nose, mouth, and ears on our face. Our eyes help us to see the things around us. Our nose helps us to breathe and smell. We eat food with our mouth. It also helps us to talk. Our ears help us to hear.

Our hands help us to write, eat and play. Our legs help us to walk and run. All body parts work together to keep us healthy and active.

AP – SCERT

Activity–1

Name the parts that help us to

- Watch T.V ______________
- Listen to music ______________
- Sing songs ______________
- Smell flowers ______________
- Taste chocolates ______________
- Draw a picture ______________
- Kick the ball ______________

படங்களை கவனி.

- அந்த குழந்தைகள் என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள்?
- நீ எவ்வாறு கை தட்டுவாய்?
- என்னென்ன செயல்களை கைகளால் செய்யலாம்?
- என்னென்ன செயல்களை கால்களினால் செய்யலாம்?

உடல் பாகங்களின் வேலைகள் :

நமது முகம் கண்கள், மூக்கு, வாய் மற்றும் செவிகள் ஆகிய உறுப்புகளை கொண்டுள்ளது. சுற்றியுள்ள பொருட்களை காண கண்கள் உதவுகின்றன. மூக்கு சுவாசிக்கவும், பொருட்களின் மணம் நுகரவும் உதவுகின்றது. வாய் உணவை உண்ணவும், பேசவும் உதவுகிறது. செவிகள் கேட்பதற்கு உதவுகின்றன.

நமது கைகள் எழுதுவதற்கும், உணவு உண்பதற்கும், விளையாடுவதற்கும் பயன்படுகின்றன. நமது கால்கள் நடப்பதற்கும் ஓடுவதற்கும் நமக்கு உதவுகின்றன. இவ்வாறாக அனைத்து உடல் உறுப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நாம் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க உதவுகின்றன.

AP - SCERT

செயல்-1

கீழுள்ள வேலையை செய்ய உதவும் பாகங்களை எழுது.

- தொலைக்காட்சியை பார்த்தல் ______________
- இசையை கேட்டல் ______________
- பாடலை பாடுதல் ______________
- பூக்களின் மணம் நுகர்தல் ______________
- இனிப்புகளின் சுவை அறிதல் ______________
- படங்களை வரைதல் ______________
- பந்தை உதைத்தல் ______________

Sense organs :

Teacher : Children, I have a few things for you. Tell me what you notice. (shows a ball)

Ravi : It's yellow and round.

Teacher : How did you know it?

Ravi : I saw it.

Teacher : (Rings a bell) What do you hear now ?

Siri : Bell sound.

Teacher : What helped you to know the sound?

Siri : My ears.

Teacher : (showing a rose) How does it smell?

Venkat : It smells so nice.

Teacher : What helped you to smell the flower?

Venkat : My nose.

Teacher : (shows a chocolate) What will be the taste of this chocolate?

Anu : It's sweet.

Teacher : How did you say that?

Anu : By tasting it.

Teacher : (gives a soft toy) How do you feel when you touched it ?

Indu : It feels soft.

Teacher : So, You used your eyes, ears, nose, tongue and skin to feel the senses. These five organs are called **sense organs.**

The five sense organs are the eyes, ears, nose, tongue and the skin. They help us learn about our surroundings through the senses of sight, hearing, smell, taste and touch.

AP - SCERT

Activity-2 :

Let us play a fun game :
Place some flowers, bell, sweet, book, pencil, cotton, wool on a table. Blindfold your friends one by one and ask them to identify the things on the table. Instruct them that they can identify the things with touch, sound, taste or smell.



புலன் உறுப்புகள் :

ஆசிரியர்: குழந்தைகளே, என்னிடம் உங்களுக்காக சில பொருட்கள் உள்ளன. நீங்கள் கவனித்ததைச் சொல்லுங்கள். (ஒரு பந்தை காட்டுகிறார்).

ரவி : இது மஞ்சள் நிறத்தில் உருண்டையாக இருக்கிறது.

ஆசிரியர்: அது எப்படி உனக்குத் தெரிந்தது?

ரவி : நான் அதைப் பார்த்தேன்.

ஆசிரியர்: (மணியை அடிக்கிறார்) இப்போது உங்களுக்கு என்ன கேட்கிறது?

ராஜி : மணிச் சத்தம்

ஆசிரியர்: அந்தச் சத்தத்தை அறிய உங்களுக்கு எது உதவியது?

ராஜி : எனது காதுகள்

ஆசிரியர்: (ஒரு ரோஜாவைக் காட்டி) இதன் மணம் எவ்வாறு உள்ளது?

வெங்கட் : இது மிகவும் நறுமணமாக இருக்கிறது.

ஆசிரியர்: பூவின் வாசனையை அறிய உங்களுக்கு எது உதவியது?

வெங்கட் : எனது மூக்கு.

ஆசிரியர்: (ஒரு சாக்லேட்டைக் காட்டி) இந்த சாக்லேட்டின் சுவை எப்படி இருக்கும்?

அனு : இது இனிப்பாக இருக்கும்.

ஆசிரியர்: அதை நாம் எப்படிச் சொல்ல முடியும்?

அனு : அதை நாம் சுவைத்தால் தெரிந்துவிடும்.

ஆசிரியர்: (ஒரு மிருதுவான பொம்மையைக் கொடுக்கிறார்) இதைத் தொடும்போது உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?

இந்து : இது மிகவும் மென்மையாக தோன்றுகிறது.

ஆசிரியர்: எனவே, உணர்வுகளை உணர உங்கள் கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு மற்றும் தோலைப் பயன்படுத்தினீர்கள். இந்த ஐந்து உறுப்புகளையே புலன் உறுப்புகள் என்கிறோம்.

கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு மற்றும் தோல் (மெய், வாய், கண், மூக்கு, செவி) ஆகிய ஐந்தும் ஐம்புலன் உறுப்புகள் ஆகும். இவை பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல் மற்றும் தொடுதல் ஆகிய உணர்வுகள் மூலம் நம்மைச் சுற்றியுள்ளவற்றை அறிய உதவுகின்றன.

செயல்-2

ஒரு வேடிக்கையான விளையாட்டு விளையாடலாம் :

ஒரு மேசை மீது பூக்கள், மணி, இனிப்புகள், புத்தகம், பென்சில், பருத்தி, கம்பளி ஆகியவற்றை வைக்கவும். உங்கள் நண்பர்களின் கண்களை ஒரு துணியால் கட்டிவிட்டு, மேசை மீது உள்ள பொருட்களை கண்டுபிடிக்குமாறு கூறவும். பொருட்களை தொடுதல், ஒலி, சுவை அல்லது வாசனை மூலம் கண்டறியலாம் என கூறுங்கள்.



AP SCERT

If you are blind-folded you cannot see things. You can use other body parts like your nose, ears and hands to know the things.

Can we ride a bicycle only with our legs? What other body parts are involved in cycling? We use some body parts together to perform different works.

Do you know some people may not walk without support. They might have lost their lower limbs due to an accident or illness. Some people cannot see, some cannot talk, some cannot hear sounds. They are called 'Differently abled persons' or 'Divyang'.
Children with any of these difficulties are also called as 'Children with Special Needs' (CWSN).

Healthy body :

We should always keep our body clean. Eat healthy food to stay strong. We should eat a lot of vegetables and fruits.

Good habits to stay healthy

கண்களை துணியால் மூடிய பிறகு, உன்னால் எதையும் பார்க்க முடியாது. மூக்கு, செவிகள் மற்றும் கைகளை பயன்படுத்தி பொருட்களை கண்டறியலாம்.

கால்களை மட்டுமே பயன்படுத்தி, சைக்கிளை மிதிக்க முடியுமா? சைக்கிளை மிதிக்கும் போது பங்கு பெறும் உடலின் பிற பாகங்கள் எவை? நமது உடல் பாகங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதால் பல வேலைகளை செய்ய முடிகிறது.

சிலர் மற்றவர்களின் உதவியின்றி நடக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்களா? விபத்து அல்லது நோய் காரணமாக அவர்கள் தங்கள் கால்களை இழந்திருக்கலாம். சிலரால் பார்க்க முடியாது, சிலரால் பேச முடியாது, சிலரால் ஒலிகளைக் கேட்க முடியாது. அவர்கள் மாற்றுத் திறனாளிகள் அல்லது ஊனமுற்றோர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

இத்தகைய குறைபாடுகள் உள்ள குழந்தைகள் 'சிறப்புத் தேவையுடைய குழந்தைகள்' (CWSN) என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

AP_SCERT

ஆரோக்கியமான உடல்:

நமது உடலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். உடல் உறுதியடைய சத்தான உணவுகளை உண்ண வேண்டும். காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகளவில் உண்ண வேண்டும்.

ஆரோக்கியமாக இருக்க நல்ல பழக்கங்கள்

Let us Do

Do you know how to wash your hands?

Take some soap and wash your hands as shown in the picture. Make it as regular practice.

If you don't wash your hands before and after food, you may fall sick.



1. Palm to Palm 2. Between fingers 3. Back of hands 4. Base of thumbs



5. Back of fingers 6. Finger nails 7. Wrists 8. Rinse and wipe dry

AP – SCERT

Let Us Know !

Global Handwashing Day is celebrated every year on **October 15th**. It reminds everyone about the importance of washing hands with soap and water to stay healthy. On this day schools organize activities to teach children how clean hands help to prevent germs and sickness. It encourages everyone to make handwashing a daily habit for a healthy life.

Amazing Facts :

We have five fingers. Fingers have names. But some people have six fingers.



இதைச் செய்வோம்

கையை எவ்வாறு கழுவுதல் வேண்டும் என உனக்குத் தெரியுமா?
படத்தில் காட்டியபடி சோப்பினால் கைகளை கழுவுதல் வேண்டும். இப்பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

உணவு உண்பதற்கு முன்பும், பின்பும் கைகளை கழுவவில்லை எனில் உடல்நலக் குறைவு ஏற்படும்.



1. உள்ளங்கைகள்
2. விரல்களுக்கிடையே கழுவுதல்
3. கைகளின் பின்புறம்
4. கட்டை விரலின் அடிப்பகுதி
5. விரல்களின் பின்புறம்
6. விரல் நகங்களின் இடுக்கு
7. மணிக்கட்டு
8. நீரால் கழுவி உலர வைத்தல்

நாம் தெரிந்துகொள்வோம் !

சர்வதேச கைகழுவும் தினம் ஒவ்வொரு ஆண்டும் **அக்டோபர் 15 ஆம் நாள்** கொண்டாடப்படுகிறது. ஆரோக்கியமாக இருக்க சோப்பு மற்றும் தண்ணீரைக் கொண்டு கைகளைக் கழுவுவதன் முக்கியத்துவத்தை இது அனைவருக்கும் நினைவூட்டுகிறது. இந்த நாளில், குழந்தைகள் எவ்வாறு கைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் கற்பிக்கப் பள்ளிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றனர். கைகளைக் கழுவுவதை ஆரோக்கியமான ஒரு பழக்கமாக மாற்ற இது அனைவரையும் ஊக்குவிக்கிறது.

வியப்பூட்டும் உண்மைகள்:

கை விரல்களுக்கு பெயர்கள் உள்ளன. ஒவ்வொரு கையிலும் 5 விரல்கள் இருக்கும். சிலருக்கு 6 விரல்கள் உண்டு.

Good touch and Bad touch :

Till now, we have studied the parts of body. Do you know some parts of the body are called private parts?

Look at the picture:



Some of our body parts like the chest, between legs, and bottoms are called private parts, because no one should see or touch them. And it is not right to touch, see or talk about those parts by someone. When we were children, mother and father might have touched us to help us to take bath or clean ourselves. That is not a secret and it is okay for a small baby or kid to get help with bathing. Some touches are good, and some are bad.

What is good touch?



Good touch is a touch that cares for us or makes us feel safe like your mother hugging you or your father holding your hand while walking. Examples for good touch – hugging, kissing on the head and cheeks by father, shaking hands, putting hands on shoulder by friends.

What is bad touch?



Bad touch is a touch that makes us feel sad, angry, scared or confused. If anyone touches the private parts it is called bad touch. Because it makes us uncomfortable. Don't let anyone touch those private parts.

What to do if someone touches it?

AP_SCERT

நல்ல தொடுதல் - தீய தொடுதல் :

நாம் இதுவரை உடலிலுள்ள உறுப்புகளைப் பற்றி படித்தோம். நம் உடலில் சில பாகங்களை மறைமுக பாகங்கள் என்று அழைக்கப்படுவது உனக்கு தெரியுமா?

கீழுள்ள படத்தைப் பார்:



நம் உடலின் சில பாகங்களான மார்பு, கால்களுக்கு இடையில், பின்பகுதி போன்றவற்றை மறைமுக பாகங்கள் என அழைக்கிறோம். ஏனெனில் அவற்றை யாரும் பார்க்கவோ அல்லது தொடவோக்கூடாது. மறைமுக பாகங்களை தொடவோ, பார்க்கவோ அல்லது அதைப்பற்றி பேசவோ யாருக்கும் உரிமை இல்லை. நாம் சிறியவர்களாக இருக்கும்போது அப்பாவும், அம்மாவும் நம்மை குளிக்க வைத்திருப்பார்கள். அதில் எந்த ரகசியமும் இல்லை மற்றும் சிறுகுழந்தையை குளிக்க வைப்பது சரியானதாகும். சில தொடுதல்கள் நல்லவை, சில தொடுதல்கள் தீயவை.

நல்ல தொடுதல் என்றால் என்ன?



நம் மீது அக்கறை கொள்ளும் நபர் அல்லது தாய் நம்மை கட்டியணைப்பது அல்லது தந்தை கைகளை பிடித்து நடப்பது போன்ற பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் தொடுதல் நல்ல தொடுதல் ஆகும். நல்ல தொடுதலுக்கு உதாரணங்கள் - பெற்றோர் கட்டியணைத்தல், தலை மற்றும் கன்னத்தில் முத்தமிடுதல், நண்பர்கள் கைகுலுக்குதல் மற்றும் தோள்பட்டையில் கையை வைத்தல் போன்றவை.

தீய தொடுதல் என்றால் என்ன?



நாம் விரும்பத்தகாத, கோபமூட்டக்கூடிய, பயமுறுத்தக்கூடிய அல்லது குழப்பமடையச் செய்கின்ற தொடுதல் தீய தொடுதல் ஆகும். யாராவது நமது உடலின் மறைமுக பாகங்களை தொட்டால் அது தீய தொடுதல் ஆகும். ஏனெனில் அது நம்மை கவலையுறச் செய்யும். யாரையும் நம் மறைமுக பாகங்களை தொடவிடக்கூடாது.

யாராவது தீய தொடுதல் செய்தால் என்ன செய்ய வேண்டும்?

If someone touches our private parts and makes us uncomfortable,

In that situation you follow three steps:

1. Scream **'STOP'**
2. Run away from that place.
3. Tell a trusted adult about it and get help.

Say "Don't touch" in a loud voice

Leave the spot quickly

Tell elders (like parents or teacher) till you get help

AP SCERT

Anyone can make us uncomfortable or scared by their bad touch. It can be by a known person or an unknown person. So if anyone touches your private parts or asks to touch their private parts, we should do the three steps mentioned above and get help from parents or adults whom we trust.

We don't have to feel bad for informing about bad touch. It is not our fault. So immediately inform your parents.

Say **'NO'** to bad touch.

Do You Know !

CHILD LINE **1098** is a national, 24x7, free, phone emergency outreach service for children in need of care and protection.

CHILD LINE 1098 NIGHT & DAY

யாராவது நமது மறைமுக பாகங்களை தொட்டால் அது நமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். அத்தகைய சூழ்நிலைகளில் கடைபிடிக்க வேண்டிய மூன்று படிநிலைகள்:

1. '**நிறுத்து**' என கத்த வேண்டும்.

2. அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும்.

3. நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடம் கூறி உதவி பெற வேண்டும்.

'என்னைத் தொடாதே' என கத்த வேண்டும்

அந்த இடத்தைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும்

பெரியவர்களிடம் பெற்றோர் அல்லது ஆசிரியர்களிடம் கூற வேண்டும்

AP SCERT

யார் வேண்டுமானாலும் தீய தொடுதல் மூலம் நம்மை பயமுறுத்தவோ அல்லது கவலையுறவோச் செய்யலாம். அது தெரிந்தவர்களாக இருக்கலாம் அல்லது தெரியாதவர்களாக இருக்கலாம். யாராவது உங்கள் மறைமுக பாகங்களை தொட்டாலோ அல்லது அவர்களின் மறைமுக பாகங்களை தொடக்கூறினாலோ மேற்கூறிய மூன்று படிநிலைகளை கடைபிடிக்க வேண்டும் மற்றும் பெற்றோரிடம் அல்லது நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடம் கூறி உதவி பெற வேண்டும்.

தீய தொடுதல் பற்றி கூற பயப்படக்கூடாது. அது நம் தவறு அல்ல. உடனடியாக பெற்றோரிடம் கூற வேண்டும்.

'தீய தொடுதல்' '**வேண்டாம்**' எனக் கூறுவோம்.

உனக்கு தெரியுமா !

குழந்தை பாதுகாப்பு உதவி எண் **1098**, ஒரு தேசிய அளவிலான இரவு பகல் பாதுகாப்பு (24x7) மற்றும் அவசர உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி சேவை.

Do these interesting activities in your class. Observe how many children can do this.

1. Without touching your teeth fold your tongue towards the back of your mouth.

2. Roll your tongue by lifting it from the sides.

3. Make a 'V' by separating two fingers of your hand to each side.

4. Open all the toes of your feet. Now without moving the others, move the little toe.

5. Move your ears, without holding them.

Key Words

head, trunk, hands and legs, neck, breathe, private parts, sense organs, health, hand wash, exercise, differently abled, good touch, bad touch.

AP SCERT

What we have learnt ?

- The parts of the body help us to do different activities.
- Our body is divided into head, trunk and limbs (hands and legs).
- We have five sense organs.
- We have to take care of our body to be healthy.
- Children who cannot see, cannot walk, cannot talk, cannot hear sounds etc, are called **children with special needs (CWSN)**.
- Good touch is a touch that cares for us or makes us feel safe.
- Bad touch is a touch which makes us feel sad, angry, scared or confused.
- We should know which touch is good and which is bad.

கீழுள்ள செயல்களை உங்கள் வகுப்பில் செய்து பாருங்கள். எத்தனை குழந்தைகளால் இவற்றைச் செய்ய முடிகிறது என்பதைக் கவனியுங்கள்.

1. பற்களைத் தொடாமல் உங்கள் நாக்கை வாயின் உள்புறம் நோக்கி மடியுங்கள்.

2. உங்கள் நாக்கை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் வரை சுழற்றுங்கள்.

3. உங்கள் கையின் இரண்டு விரல்களை இருபுறமும் விரித்து 'V' வடிவத்தை உண்டாக்குங்கள்.

4. உங்கள் காலின் அனைத்து விரல்களையும் விரியுங்கள். இப்போது மற்ற விரல்களை அசைக்காமல் காலின் சுண்டு விரலை மட்டும் அசைக்கவும்.

5. கைகளால் பிடிக்காமல் உங்கள் காதுகளை மட்டும் அசைக்கவும்.

AP_SCERT

முக்கியச் சொற்கள்

தலை, முண்டம், கை கால்கள், கழுத்து, சுவாசித்தல், மறைமுக பாகங்கள், புலனுறுப்புகள், ஆரோக்கியம், கை கழுவுதல், உடற்பயிற்சி, மாற்றுத் திறனாளிகள், நல்ல தொடுதல், தீய தொடுதல்.

நாம் கற்றவை

- நமது உடல் பாகங்கள் வெவ்வேறு செயல்களை செய்ய உதவுகின்றன.
- நமது உடல் தலை, முண்டம் மற்றும் கைகால்கள் என மூன்று முக்கிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- நமது உடலில் ஐந்து புலனுறுப்புகள் உள்ளன.
- நாம் நமது உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும்.
- சில குழந்தைகளால் பார்க்க முடியாது, நடக்க முடியாது, பேச முடியாது, சத்தங்களை கேட்க முடியாது. இதுபோன்ற குழந்தைகளை **சிறப்புத் தேவையுடைய குழந்தைகள்** என்று அழைக்கிறோம்.
- நம் மீது அக்கறைக் கொள்ளும், பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் தொடுதல் நல்ல தொடுதல்.
- தீய தொடுதல் என்பது நம்மை கவலை, கோபம், பயம் அல்லது குழப்பமடையச் செய்வது.
- நாம் நல்ல தொடுதல், தீய தொடுதல் எவை என அறிந்திருக்க வேண்டும்.

Improve Your Learning

1. Name any two parts of the body.
2. Which sense organ helps us to see?
3. Who are called differently abled persons?
4. Which part of the body helps us to hear sounds?
5. Explain what a healthy body means.
6. Why should we wash hands before eating?
7. What is the difference between good touch and bad touch?
8. Rishi's mother is cooking delicious pulihora. Rishi smells the food and knows that it is pulihora. Which sense organ helps Rishi to smell the pulihora.

   A) Eyes

   B) Skin

   C) Nose

   D) Tongue



AP SCERT

9. You played outside and came home. What should you do before eating food?

   A) Watch TV   B) Wash hands   C) Sleep   D) Play more (   )

10. Look at the habits below. Circle the healthy habits:
    - Brushing teeth twice a day
    - Eating uncovered food
    - Washing hands
    - Playing in dirty water

கற்றலை மேம்படுத்துதல்

1. உடலின் ஏதேனும் இரண்டு உறுப்புகளின் பெயர்களைக் கூறுக.
2. நாம் பார்ப்பதற்கு எந்த புலன் உறுப்பு உதவுகிறது?
3. மாற்றுத் திறனாளிகள் என்று அழைக்கப்படுபவர்கள் யார்?
4. ஒலிகளைக் கேட்க உடலின் எந்த உறுப்பு உதவுகிறது?
5. ஆரோக்கியமான உடல் என்றால் என்ன என்பதை விளக்குக.
6. சாப்பிடும் முன்னர் நாம் ஏன் கைகளை கழுவ வேண்டும்?
7. நல்ல தொடுதல் மற்றும் தீய தொடுதல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வித்தியாசம் என்ன?
8. ரிஷியின் அம்மா சுவையான புளியோதரை சமைக்கிறார். ரிஷி உணவை வாசனையின் மூலம் அது புளியோதரை என்று சரியாக தெரிந்துக் கொள்கிறான். புளியோதரையின் வாசனையை அறிய ரிஷிக்கு எந்த புலன் உறுப்பு உதவுகிறது? ( )

A) கண்கள்

B) தோல்

C) மூக்கு

D) நாக்கு



9. நீங்கள் வெளியில் விளையாடிவிட்டு வீட்டிற்கு வந்தீர்கள். உணவு உண்பதற்கு முன்பு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ( )

A) தொலைக்காட்சி பார்த்தல்

B) கைகளை கழுவுதல்

C) உறங்குதல்

D) மேலும் அதிகமாக விளையாடுதல்

10. கீழுள்ள பழக்கங்களைப் படித்துப் பார்த்து ஆரோக்கியமான பழக்கங்களை வட்டமிடவும்.

- தினமும் இரண்டு முறை பல்துலக்குதல்
- மூடி வைக்கப்படாத உணவை உண்பது
- கைகளை கழுவுவது
- அழுக்கு நீரில் விளையாடுவது

AP SCERT

11. Match the following:

Body part	**Action/function**
	Hearing
	Smelling
	Seeing
	Tasting

AP_SCERT

12. One boy likes to brush his teeth, but another boy does not. Who will have healthier teeth? Why?

13. A stranger tries to touch you in a way that makes you uncomfortable. What should you do first? ( )

A) Keep quiet B) Say 'NO' loudly

C) Go with the stranger D) Hide

14. Is it good or bad to skip bathing for many days? Explain your answer.

15. Draw and label any two sense organs and write one use for each.

....

....

....

....

11. பின்வருவனவற்றைப் பொருத்துக:

உடல் பாகம் | **பணி/ செயல்**

கேட்டல்

நுகர்தல்

பார்த்தல்

சுவைத்தல்

AP SCERT

12. ஒரு சிறுவன் பல்துலக்க விரும்புகிறான். ஆனால் மற்றொரு சிறுவன் விரும்பவில்லை. அவர்களில் யாருடைய பற்கள் ஆரோக்கியமாக இருக்கும்? ஏன்?

13. ஒரு புதிய நபர் உங்களுக்கு சங்கடம் ஏற்படும் வகையில் உங்களைத் தொட முயன்றால் நீங்கள் முதலில் என்ன செய்ய வேண்டும்? (   )

A) அமைதியாக இருக்க வேண்டும் B) சத்தமாக 'வேண்டாம்' என்று சொல்ல வேண்டும்

C) அந்த புதிய நபருடன் செல்ல வேண்டும் D) ஒளிந்துகொள்ள வேண்டும்

14. பல நாட்கள் குளிக்காமல் இருப்பது நல்லதா அல்லது கெட்டதா? உங்கள் பதிலை விளக்குங்கள்.

15. ஏதேனும் இரண்டு புலன் உறுப்புகளை வரைந்து பெயரிடவும் மற்றும் ஒவ்வொன்றிற்கும் ஒரு பயனை எழுதவும்.

....

....

....

....

Food We Eat

Learning Outcomes

Pupils will be able to:

- Identify the need of food for all living things. (CG-2)
- Classify various food sources food from plants and animals. (CG-4)
- List out food items that can be eaten raw and that must be cooked. (CG-4)
- Identify suitable food for different age groups. (CG-4)
- Describe about good habits. (CG-4)
- Identify different varieties of food. (CG-4)



AP – SCERT

Anu : Nanna, shall we go on any tour on the next second saturday?

Nanna : Ok, Let's go to the Bapatla beach festival.

Anu : Oh! wonderful. I heard that the beach looks amazing at sunrise and sunset.

Amma : Yes, there are many stalls of toys, handicrafts, and food items in the festival.

Kiran : I am eagerly waiting to eat prawn fry that is served with lemon and onion.

Nanna : I will taste Andhra style spicy fish curry with rice.

Anu : I want to taste the badam milk and coconut water.

Naana : Don't forget to try bajjeelu and punugulu too.

Amma : We all excited to taste the food varieties in the beach festival.

Naana : Yes, "Without food life cannot go on".

நாம் உண்ணும் உணவு

D6T4P3

கற்றல் விளைவுகள்

மாணவர்கள் இவற்றை செய்வர்:

- அனைத்து உயிரினங்களுக்கும் உணவு தேவையானது என்பதை அறிவர். (CG-2)
- தாவரங்களிலும், விலங்குகளிலும் இருந்து கிடைக்கும் உணவுகளை வகைப்படுத்துவர். (CG-4)
- சமைக்காமல் மற்றும் சமைத்து உண்ணக்கூடிய உணவுகளை பட்டியலிடுவர். (CG-4)
- வெவ்வேறு வயதினருக்கு ஏற்ற உணவுகளை அடையாளம் காண்பர். (CG-4)
- நல்ல உணவு பழக்கங்களை விவரிப்பர். (CG-4)
- உணவின் வெவ்வேறு வகைகளை அடையாளம் காண்பர். (CG-4)



அனு : அப்பா, அடுத்த இரண்டாவது சனிக்கிழமை நாம் ஒரு சுற்றுலா போகலாமா?

அப்பா: சரி, நாம் பாபட்லா கடற்கரை திருவிழாவிற்கு போகலாம்.

அனு : ஓ! அருமை. சூரிய உதயம் மற்றும் மறையும் நேரத்தில் அந்த கடற்கரை மிகவும் அழகாக இருக்கும் என்று கேள்விப்பட்டேன்.

அம்மா: ஆம், அந்த திருவிழாவில் நிறைய பொம்மை கடைகள், கைத்தறி பொருட்கள் மற்றும் உணவு வகைகள் இருக்கும்.

கிரண் : எலுமிச்சையும், வெங்காயமும் சேர்த்து பரிமாறப்படும் இறால் வறுவலை சாப்பிட ஆவலாக காத்திருக்கிறேன்.

அப்பா: நான் சாதத்துடன் ஆந்திரா பாணியில் காரமான மீன் குழம்பை சுவைப்பேன்.

அனு : நான் பாதாம் பால் மற்றும் இளநீரை சுவைக்க விரும்புகிறேன்.

அப்பா: பஜ்ஜி மற்றும் சிறிய போண்டா (புனுகுலு)வையும் சுவைக்க மறக்காதீர்கள்.

அம்மா: கடற்கரை திருவிழாவில் உள்ள பல்வேறு உணவுகளை சுவைக்க நாங்கள் அனைவரும் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம்!

அப்பா: ஆம், உணவு இல்லாமல் வாழ்க்கை தொடர முடியாது.

AP – SCERT

Food :

The Food helps us live and grow. It gives us energy. It keeps us healthy and strong.



Food from plants :

We eat different parts of plants as food. We eat leaves of some plants, stems, flowers, fruits, seeds and also the roots. Rice is the main food item in our diet. It is produced from paddy. Wheat, and millets are the other food grains that we eat. We eat food grains other than paddy like pearl millet (sajjalu), little millet (samalu), finger millet (raagulu) and Italian millet (korralu).

Look at the following edible part of the plants.

Paddy

Wheat

Pearl millet

Some plants give us food from the roots like carrot, beetroot and radish.

Carrot

Beetroot

Radish

Let Us Know !

We get jaggery and sugar from sugarcane.

AP - SCERT

உணவு :

உணவு நமக்கு வாழவும், வளரவும் உதவுகிறது. அது நமக்கு சக்தி அளிக்கிறது. அது நம்மை ஆரோக்கியமாகவும், வலிமையாகவும் வைத்திருக்கிறது.



தாவரங்களிலிருந்து கிடைக்கும் உணவு :

நாம் தாவரங்களின் பல்வேறு பகுதிகளை உணவாக உண்ணுகிறோம். சில தாவரங்களின் இலைகள், தண்டுகள், மலர்கள், பழங்கள், விதைகள் மற்றும் வேர்கள் ஆகியவற்றை நாம் உணவாக உண்ணுகிறோம். அரிசி நமது முக்கிய உணவாகும். அது நெல் பயிரிலிருந்து கிடைக்கிறது. கோதுமை மற்றும் சிறுதானியங்களும் நாம் உண்ணும் மற்ற தானியங்கள். நெல் தவிர நாம் உண்ணும் சில தானியங்கள் கம்பு, சாமை, கேழ்வரகு, தினைகள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள தாவரங்களின் உண்ணக்கூடிய பகுதிகளை பாருங்கள்.

நெல்

கோதுமை

கம்பு

சில தாவரங்கள் வேர்களிலிருந்து நமக்கு உணவு அளிக்கின்றன.

கேரட்

பீட்ரூட்

முள்ளங்கி

நாம் தெரிந்துகொள்வோம் !

கரும்பிலிருந்து நாம் வெல்லம் மற்றும் சர்க்கரை பெறுகிறோம்.

AP-SCERT

The most **nutrient** part of the plant is a leaf.
We eat different types of leaves.

Food from leaves :

Is cabbage a flower? or a leaf? Ask your teacher.

Amaranthus


Drumstick leaves


Spinach

Curry leaves

We eat the flowers of banana and cauliflower. Cloves (lavanga) are the flavoured dry buds used as condiments. Saffron flowers are used in making special food items.

Banana flower

Cauliflower

Cloves

We love to eat the fruits like mango, orange, jackfruit, papaya, apple, banana, grapes, muskmelon and watermelon. Do all fruits taste sweet? We must eat all fruits. They give us good health.

Mango

Orange

Apple


Banana

Which fruit do you like most?

Amazing Facts

Mushroom is a fungi which has many nutrients.

AP-SCERT

தாவரத்தின் மிகச் சத்தான பகுதி இலை. நாம் பல வகையான இலைகளை உண்ணுகிறோம்.

இலைகளிலிருந்து கிடைக்கும் உணவு :

முட்டைகோஸ் ஒரு பூவா? அல்லது இலையா? உங்கள் ஆசிரியரிடம் கேளுங்கள்.

சிறுகீரை



முருங்கை இலை

பசலைக் கீரை

கறிவேப்பிலை

நாம் வாழைப்பூ மற்றும் முட்டைகோஸ் ஆகியவற்றின் பூக்களை உண்ணுகிறோம். கிராம்பு என்பது சுவைக்காக பயன்படுத்தப்படும் உலர்ந்த மொட்டுகள். குங்குமப்பூ சிறப்பு உணவுகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

வாழைப்பூ

முட்டைக்கோஸ்

கிராம்பு

நாம் மாம்பழம், ஆரஞ்சு, பலாப்பழம், பப்பாளி, ஆப்பிள், வாழைப்பழம், திராட்சை, முலாம்பழம் மற்றும் தர்பூசணி போன்ற பழங்களை விரும்பி சாப்பிடுகிறோம். அனைத்து பழங்களும் இனிப்பாக இருக்குமா? நாம் எல்லா பழங்களையும் சாப்பிட வேண்டும். அவை நமக்கு நல்ல ஆரோக்கியத்தை அளிக்கின்றன.

மாம்பழம்



ஆரஞ்சு

ஆப்பிள்



வாழைப்பழம்

நீங்கள் அதிகம் விரும்பும் பழம் எது?

வியப்பூட்டும் உண்மைகள்

காளான் ஒரு பூஞ்சை வகை, அதில் நிறைய சத்துக்கள் உள்ளன.

AP SCERT

Tomato and cucumber are also fruits, but we consider these as vegetables.

Tomato



Cucumber (Keera)

Which part of this fruit do we eat?

....

Let us know where cooking oil comes from.

We can get oil from the seeds of groundnut, sesame, mustard, sunflower and olive. Cashew, peas, cowpeas and groundnuts are seeds that we eat.

Cashew

Peas

Cowpeas

Ground-nuts

Pulses like red gram, green gram, black gram and cereals like paddy, wheat are all seeds. These seeds are used in cooking.

Food from animals :

We get many types of food from animals. We eat eggs and meat as our food. We drink milk. Cows, goats, buffaloes give us milk. We get different products from milk like curd, ghee, butter, cheese etc.

Observe the food items in your home. Identify and write any four items that are prepared using milk.

1) ....

2) ....

3) ....

AP-SCERT

தக்காளி மற்றும் வெள்ளரிக்காய் பழங்களே. ஆனால் நாம் அவற்றை காய்கறிகளாகவே கருதுகிறோம்.

தக்காளி



வெள்ளரிக்காய்

இந்தப் பழத்தின் எந்தப் பகுதியை நாம் சாப்பிடுகிறோம்?

....

சமையல் எண்ணெய் எங்கிருந்து கிடைக்கிறது என்பதை அறிந்துகொள்வோம்.

நிலக்கடலை, எள், கடுகு, சூரியகாந்தி மற்றும் ஆலிவ் போன்ற விதைகளிலிருந்து எண்ணெய் பெறுகிறோம். முந்திரி, பட்டாணி, காராமணி மற்றும் நிலக்கடலை ஆகியவை நாம் சாப்பிடும் விதைகளாகும்.

முந்திரி

பட்டாணி

காராமணி

நிலக்கடலை

துவரம் பருப்பு, பச்சைப் பயறு, உளுந்து போன்ற பருப்புகளும், நெல், கோதுமை போன்ற தானியங்கள் அனைத்தும் விதைகளே. இந்த விதைகள் சமையலில் பயன்படுத்தப்படுகின்றன.

விலங்குகளிலிருந்து கிடைக்கும் உணவு :

விலங்குகளிலிருந்து பல வகையான உணவுகளை நாம் பெறுகிறோம். நாம் முட்டை மற்றும் இறைச்சியை உணவாக சாப்பிடுகிறோம். பால் குடிக்கிறோம். மாடுகள், ஆடுகள், எருமைகள் ஆகியவை நமக்கு பால் தருகின்றன. பாலிலிருந்து தயிர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி போன்ற பல மாறுபட்ட பொருட்களைப் பெறுகிறோம்.

உங்கள் வீட்டில் உள்ள உணவுப் பொருட்களை கவனியுங்கள். பாலை பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஏதேனும் நான்கு உணவுப் பொருட்களை கண்டறிந்து எழுதுங்கள்.

1) ....

2) ....

3) ....

AP SCERT



We rear some birds like ducks and hens for eggs and meat.

Can you name any food item prepared with egg?



People rear sheep, goat, hen etc. Some eat the meat of these animals.



People also eat sea animals like fish, prawns, crabs and snails in food.



Amazing Facts

In some countries like India, France, China and Nigeria some people eat snails as a special dish. It is rich in protein, low in fat and contains vitamins.



AP – SCERT

முட்டை மற்றும் இறைச்சிக்காக வாத்து, கோழி போன்ற சில பறவைகளை நாம் வளர்க்கிறோம்.

முட்டையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஏதேனும் உணவினை நீங்கள் கூற முடியுமா?



மக்கள் ஆடு, செம்மறி ஆடு, கோழி போன்றவற்றை வளர்க்கிறார்கள். சிலர் இந்த விலங்குகளின் இறைச்சியை உணவாக உண்கிறார்கள்.



மக்கள் மீன், இறால், நண்டு மற்றும் நத்தை போன்ற கடல் உயிரினங்களையும் உணவாக உண்கிறார்கள்.

AP - SCERT

வியப்பூட்டும் உண்மைகள்

இந்தியா, பிரான்ஸ், சீனா மற்றும் நைஜீரியா போன்ற சில நாடுகளில் சிலர் நத்தையை ஒரு சிறப்பு உணவாக உண்ணுகிறார்கள். அது புரதச்சத்து நிறைந்தது. கொழுப்பு குறைவாக உள்ளது மற்றும் வைட்டமின்களும் உள்ளன.

How do you help your mother in household work?

John helps his mother to chop or cut vegetables. While cutting, he eats them directly.

Cooked Food - Raw Food :

Which vegetables can we eat directly?

Can we eat brinjal without cooking?

We cannot eat rice, meat etc. without cooking. We can eat some vegetables without cooking. For example: carrot, onion, cucumber (kheera) etc.

Write some food items that can be eaten after cooking and that can be eaten raw.

Cooked					
Raw					

Healthy food and Junk food :

Healthy food like fruits, vegetables, milk, eggs, and grains helps us stay strong and fit. Junk food can make us weak and lazy, so we should avoid it. Eating healthy food at the right time keeps us active and happy.

AP_SCERT

Let us Do

Draw a green box for healthy food and red box for junk food in this table.

Food item	Healthy food	Junk food
Fruits		
Potato chips		
Cool drinks		
Pani puri		
Sweet potato		

நீங்கள் வீட்டுப் பணிகளில் உங்கள் அம்மாவுக்கு எவ்வாறு உதவுகிறீர்கள்?

ஜான் தனது அம்மாவுக்கு காய்கறிகளை நறுக்கி அல்லது வெட்ட உதவுகிறான். வெட்டும்போது அவற்றை நேரடியாக சாப்பிடுகிறான்.

சமைத்த உணவு - சமைக்காத உணவு :

நாம் அரிசி, இறைச்சி போன்றவற்றை சமைக்காமல் சாப்பிட முடியாது. ஆனால் சில காய்கறிகளை சமைக்காமல் சாப்பிடலாம். உதாரணமாக: கேரட், வெங்காயம், வெள்ளரிக்காய் போன்றவை. கீழுள்ள பட்டியலில் சமைத்த பிறகு சாப்பிடக்கூடிய உணவுகள் மற்றும் பச்சையாக சாப்பிடக்கூடிய உணவுகளை எழுதுங்கள்.

சமைத்த உணவு					
சமைக்காத உணவு					

ஆரோக்கிய உணவு மற்றும் ஆரோக்கியமற்ற துரித உணவு :

பழங்கள், காய்கறிகள், பால், முட்டை மற்றும் தானியங்கள் போன்ற ஆரோக்கியமான உணவுகள் நம்மை வலிமையுடன் மற்றும் உடல்நலத்துடன் வைத்திருக்க உதவுகின்றன. ஆரோக்கியமற்ற துரித உணவு நம்மை பலவீனமாகவும், சோம்பேறியாகவும் மாற்றும். ஆகவே அதனை தவிர்க்க வேண்டும். சரியான நேரத்தில் ஆரோக்கியமான உணவை சாப்பிடுவது நம்மை சுறுசுறுப்பாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கும்.

இதைச் செய்வோம்

கீழுள்ள அட்டவணையில் ஆரோக்கிய உணவிற்கு பச்சை பெட்டியும், ஆரோக்கியமற்ற துரித உணவிற்கு சிவப்பு பெட்டியும் வரையுங்கள்.

உணவுப்பொருள்	ஆரோக்கியமான உணவு	ஆரோக்கியமற்ற ஜங்க் (துரித) உணவு
பழங்கள்		
உருளைக்கிழங்கு சிப்ஸ்		
குளிர்பானங்கள்		
பானி பூரி		
சர்க்கரை வள்ளிக்கிழங்கு		

AP SCERT

Good food habits :

Good food habits help us stay strong, healthy, and active. We should eat fresh and clean food every day. Eating fruits, vegetables, milk, and grains keeps our body fit. We should drink plenty of water and avoid junk food like chips and soft drinks. Eating at the right time and chewing food properly are also good habits. We should never waste food and always wash our hands before and after eating.

Activity :

Tick (✓) the good food habits you have:

1. I wash my hands before and after having meal. ( )
2. I chew the food well and eat slowly. ( )
3. I do not leave food in my plate, at home and in school. ( )
4. I eat all the vegetables in the sambar. ( )
5. I eat curry leaves and coriander in the curries. ( )
6. I sit properly while eating and do not spill food from plate. ( )
7. I wash the fruits and vegetables before eating or cooking. ( )

AP - SCERT

Varieties of food :

Our state, Andhra Pradesh is known for it's spicy and delicious food. It is colourful and full of flavour. People here eat rice as the main food along with many tasty curries and pickles. Pulihora (tamarind rice), pappu (dhal), sambar, and rasam are common dishes. Gongura pachadi made from sour leaves is very famous in Andhra. The Coastal Andhra Pradesh is famous for seafood where as the Rayalaseema for food with millets. During festivals, people prepare special sweets like pootharekulu and bobbatlu.

Activity :

Ugadi, Vinayaka chavithi, Christmas, Sankranthi, Ramzan

நல்ல உணவு பழக்கங்கள்:

நல்ல உணவுப் பழக்கங்கள் நம்மை வலிமையானவர்களாகவும், ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க உதவுகின்றன. நாம் தினமும் புதிய மற்றும் சுத்தமான உணவை உண்ண வேண்டும். பழங்கள், காய்கறிகள், பால் மற்றும் தானியங்களை உண்பது நம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும். அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும் மற்றும் சிப்ஸ், குளிர்பானங்கள் போன்ற ஆரோக்கியமற்ற ஜங்க் (துரித) உணவுகளை தவிர்க்க வேண்டும். சரியான நேரத்தில் உண்பதும், உணவை நன்றாக மென்று உண்பதும் நல்ல பழக்கங்கள் ஆகும். நாம் ஒருபோதும் உணவை வீணாக்கக்கூடாது மற்றும் உணவுக்கு முன், பின் கைகளை நன்றாக கழுவ வேண்டும்.

செயல்

உங்களிடம் உள்ள நல்ல உணவு பழக்கங்களில் சரியானவற்றிற்கு டிக் (✓) குறியிடுங்கள்:

1. நான் சாப்பிடுவதற்கு முன்பும் சாப்பிட்ட பிறகும் கைகளை கழுவுவேன். ( )
2. நான் உணவை நன்றாக மென்று மெதுவாக சாப்பிடுவேன். ( )
3. நான் வீட்டிலும், பள்ளியிலும் உணவை வீணாக்க மாட்டேன். ( )
4. நான் சாம்பாரில் உள்ள எல்லா காய்கறிகளையும் உண்பேன். ( )
5. நான் உணவில் உள்ள கறிவேப்பிலை மற்றும் கொத்துமல்லியை உண்பேன். ( )
6. நான் சாப்பிடும்போது சரியாக உட்காருவேன் மேலும் உண்ணும்போது தட்டிலுள்ள உணவை சிந்தமாட்டேன். ( )
7. நான் சமைப்பதற்கு முன்பு அல்லது சாப்பிடுவதற்கு முன்பு பழங்களையும், காய்கறிகளையும் நன்றாக கழுவுவேன். ( )

உணவின் வகைகள்:

நமது மாநிலமான ஆந்திரப் பிரதேசம் காரமான மற்றும் ருசியான உணவுகளுக்குப் புகழ்பெற்றது. இங்குள்ள உணவுகள் வண்ணமயமாகவும், சுவை நிறைந்தவையாகவும் இருக்கும். இங்குள்ள மக்கள் முக்கிய உணவாக அரிசியை உண்பதுடன், பலவிதமான சுவையான குழம்புகள் மற்றும் ஊறுகாய்களையும் உண்கிறார்கள். புளியோதரை, பருப்பு, சாம்பார் மற்றும் ரசம் பொதுவான உணவுகள். புளிப்புச் சுவையுள்ள இலைகளால் செய்யப்படும் கோங்குரா பச்சடி (சட்னி) ஆந்திராவில் மிகவும் பிரபலமானது. கடலோர ஆந்திரப் பிரதேசம் கடல் உணவுகளுக்கு பிரபலமானது. இராயலசீமா பகுதி சிறுதானிய உணவுகளுக்குப் பிரபலமானது. திருவிழாக்களில் அரிசி மாவுத்தாள் (பூத்தரேகுலு) மற்றும் பூரணம் போளி (பொப்பட்லு) போன்ற சிறப்பு இனிப்புகளை மக்கள் தயாரிக்கிறார்கள்.

செயல் :

உகாதி (தெலுங்கு புத்தாண்டு), விநாயகர் சதுர்த்தி, கிறிஸ்துமஸ், சங்கராந்தி (பொங்கல்), தீபாவளி, ரம்ஜான்.

AP SCERT

Write the name of the food with the festival from the given list.

....

....

....

....

....

AP SCERT

Let us Do

Preparing Lemon Juice :

During summer most of us prefer to drink cool drinks, but they are harmful to our bodies. Instead, we can drink fruit juices like lemon juice. It keeps us cool and healthy.

Do you know how lemon juice is prepared?

1. Wash a lemon with clean water.
2. Cut the lemon into two halves. (Ask elders to cut lemon with the knife)

கொடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து அந்த விழாவுடன் தொடர்புடைய உணவின் பெயரை எழுதுங்கள்.

....

....

....

....

....

ARS SCERT

இதைச் செய்வோம்

எலுமிச்சைப் பழச்சாறு தயார்செய்தல்

கோடைக்காலத்தில் நம்மில் பலர் குளிர்பானங்களை குடிக்க விரும்புகிறோம். ஆனால் அவை நமது உடலுக்கு தீங்கு விளைவிக்கின்றன. அதற்கு பதிலாக, எலுமிச்சை சாறு போன்ற பழச்சாறுகளை குடிக்கலாம். அது நம்மை குளிர்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்.

எலுமிச்சை சாறு எப்படி தயாரிக்கப்படுகிறது என்று தெரியுமா?

1. எலுமிச்சையை சுத்தமான தண்ணீரில் கழுவுங்கள்.
2. எலுமிச்சையை இரண்டு துண்டுகளாக வெட்டுங்கள். (கத்தியை பயன்படுத்தி வெட்ட பெரியவர்களிடம் உதவி கேளுங்கள்)

3. Hold one half over a glass and squeeze gently to get the juice.
4. Remove any seeds that fall in.
5. Add some more water, a little sugar and a pinch of salt.
6. Stir it well with a spoon until the sugar is mixed properly.

Now , the fresh lemon juice is ready to drink.

Food for different age groups :

Some people need special kinds of food. Because, their body needs extra care. These groups include small children, and old people also.

In infants teeth are absent. Hence they are unable to chew the food. So, they are given either milk or soft food. People who are old lose their teeth and cannot chew. They too eat soft food. So, food habits change according to age.

AP – SCERT

Activity :

Ask your elders and fill in the table.

Age	What they can eat	What they cannot eat
2 Years old		
20 Years old		
80 Years old		

Amazing Facts

The food we eat every day does not come to our plate directly. It goes through many places before it reaches us. Generally plant based foods are grown on farms. Eggs are produced at poultry farms, milk and milk products are produced at diary farms. These are all are transported to shops where people buy them.





3. ஒரு பாதி எலுமிச்சையை ஒரு கண்ணாடி மேல் பிடித்து மெதுவாக பிழிந்து சாறு எடுக்கவும்.
4. அதில் விழும் விதைகளை அகற்றவும்.
5. சிறிது கூடுதல் தண்ணீர், கொஞ்சம் சர்க்கரை மற்றும் ஒரு சிட்டிகை உப்பு சேர்க்கவும்.
6. சர்க்கரை நன்றாக கரையும் வரை கரண்டியால் நன்றாக கிளறவும்.

இப்போது புதிய எலுமிச்சை சாறு குடிக்க தயாராக உள்ளது.

வெவ்வேறு வயதுடையவர்கள் உண்ணும் உணவு :

சிலருக்கு சிறப்பு வகை உணவுகள் தேவைப்படுகிறது. ஏனெனில், அவர்களின் உடலுக்கு கூடுதல் பராமரிப்பு தேவை. இந்தக் குழுக்களில் சிறிய குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அடங்குவர். சிறிய குழந்தைகளுக்கு பற்கள் இல்லாததால் அவர்கள் உணவை மென்று சாப்பிட முடியாது. ஆகவே, அவர்களுக்கு பால் அல்லது மென்மையான உணவு வழங்கப்படுகிறது. முதியவர்களுக்கும் பற்கள் உதிர்வதால் உணவை மென்று சாப்பிட முடியாது. அவர்களும் மென்மையான உணவுகளைச் சாப்பிடுகின்றனர். ஆகவே, வயதிற்கு ஏற்ப உணவு பழக்கங்கள் மாறுகின்றன.

செயல் :

உங்கள் பெரியவர்களிடம் கேட்டு அட்டவணையை நிரப்பவும்.

வயது	அவர்கள் சாப்பிடக்கூடிய உணவு	அவர்கள் சாப்பிட முடியாத உணவு
2 வயது		
20 வயது		
80 வயது		

வியப்பூட்டும் உண்மைகள்

நாம் தினமும் சாப்பிடும் உணவு நேரடியாக நம் தட்டிற்கு வருவதில்லை. அது நம்மை அடைவதற்கு முன் பல இடங்களை கடந்து வருகிறது. பொதுவாக தாவர அடிப்படையிலான உணவுகள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. முட்டைகள் கோழிப் பண்ணைகளிலும், பால் மற்றும் பால் பொருட்கள் பால் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை அனைத்தும் மக்கள் வாங்கும் கடைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.





Match the following Activity :

Shop keeper

Poultry farmer

Farmer



Fisherman

SCERT

Let Us Know !

Our Mid-day meal :

In school, we get a mid-day meal. It gives us healthy food like rice, dhal, vegetables, eggs, chikki and raagi java. These foods help us grow properly and concentrate better. Mid-day meals make sure every child gets at least one nutritious meal every day.

We should know that food is an important part of our life. It keeps us fit and healthy. So, we should eat healthy food.

பின்வருவனவற்றை பொருத்துக
செயல்

கடை உரிமையாளர்

கோழிப்பண்ணை விவசாயி

விவசாயி



மீனவர்

SCERT

நாம் தெரிந்துக்கொள்வோம் !

நமது மதிய உணவு :

பள்ளியில் நமக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. அதில் அரிசி, பருப்பு, காய்கறிகள், முட்டை, கடலை மிட்டாய் மற்றும் கேழ்வரகு கஞ்சி போன்ற சத்தான உணவுகள் உள்ளன. இந்த உணவுகள் நம்மை நல்ல முறையில் வளர உதவுகின்றன. மற்றும் கவனம் செலுத்த உதவுகின்றன. மதிய உணவுத் திட்டம் மூலம், ஒவ்வொரு குழந்தைக்கும் தினமும் குறைந்தது ஒருவேளை சத்தான உணவு கிடைக்கிறது.

உணவு என்பது நம் வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதி என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அது நம்மை உடல் தகுதியாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறது. ஆகவே, நாம் சத்தான உணவுகளை சாப்பிட வேண்டும்.

Shubh Dhin Bhojan

Shub dhin bhojan or Thidhi bhojan is an innovative community participation programme that complements the Mid Day Meal scheme. Under this programme, the local community voluntarily provides nutritious food items or a complete meal for the students on special occasions like festivals, birthdays, anniversaries, marriages, and days of national importance. This shows the love and care of the community towards the students.

Key Words

raw food, cooked food, digestion, healthy habits, community, nutritious.

AP-SCERT

What we have learnt ?

- Food is essential to live and work. Birds and animals too need food.
- Different foods are needed for different age groups.
- We get food from plants and animals.
- We eat leaves, stems, flowers, fruits, seeds and roots of different plants as our food.
- We get milk, meat and eggs from animals.
- We cook different food items in different methods using different utensils.

Improve Your Learning

1. Why do all living things need food?
2. Name two food items we get from plants.
3. Write the name of one food item eaten raw.
4. Explain the difference between food from plants and food from animals.

சுப் தின் போஜன் :

சுப் தின் போஜன் அல்லது சுபதின போஜன் என்பது மதிய உணவு திட்டத்திற்கு துணையாக அமைந்துள்ள ஒரு புதுமையான சமூக பங்கேற்பு திட்டமாகும். இந்த திட்டத்தின் கீழ், உள்ளூர் சமூகத்தினர் மாணவர்களுக்கு சத்தான உணவுப் பொருட்களையோ அல்லது முழுமையான உணவையோ தன்னார்வமாக சிறப்பு நிகழ்வுகளான திருவிழாக்கள், பிறந்த நாட்கள், ஆண்டு விழாக்கள், திருமணங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நாட்கள் போன்ற சந்தர்ப்பங்களில் வழங்குகிறார்கள். இது மாணவர்களிடம் சமூகத்தின் அன்பும், அக்கறையும் இருப்பதை காட்டுகிறது.

முக்கியச் சொற்கள்

சமைக்காத உணவு, சமைத்த உணவு, செரிமானம், ஆரோக்கிய பழக்கங்கள், சமூகம், சத்தானது.

நாம் கற்றவை

- வாழவும், வேலை செய்யவும் உணவு அவசியம். பறவைகள் மற்றும் விலங்குகளுக்கும் உணவு தேவை.
- வெவ்வேறு வயதினருக்கு வெவ்வேறு உணவுகள் தேவை.
- நாம் உணவை தாவரங்களிலிருந்தும் மற்றும் விலங்குகளிலிருந்தும் பெறுகிறோம்.
- தாவரங்களின் இலைகள், தண்டுகள், பூக்கள், பழங்கள், விதைகள் மற்றும் வேர்களை நாம் உணவாக உண்ணுகிறோம்.
- நாம் விலங்குகளிடமிருந்து பால், இறைச்சி மற்றும் முட்டைகள் பெறுகிறோம்.
- வெவ்வேறு சமையல் கருவிகளை பயன்படுத்தி, வெவ்வேறு முறைகளில் பலவிதமான உணவுகளை நாம் சமைக்கிறோம்.

AP-SCERT

கற்றலை மேம்படுத்துதல்

1. எல்லா உயிரினங்களுக்கும் உணவு ஏன் தேவை?
2. தாவரங்களிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களில் ஏதேனும் இரண்டினை எழுதுக.
3. பச்சையாக சமைக்காமல் உண்ணும் ஏதேனும் ஒரு உணவுப் பொருளின் பெயரை எழுதுக.
4. தாவரங்களிலிருந்து கிடைக்கும் உணவுகளுக்கும், விலங்குகளிலிருந்து கிடைக்கும் உணவுகளுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

5. Why should some foods be cooked before eating?
6. What are good food habits? Explain with one example.
7. Why should we eat different varieties of food?
8. Rani eats rice, vegetables, and fruits every day. What does this tell about her food habit? ( )

A) Bad habit B) Good habit

C) Lazy habit D) Wrong habit

9. After playing, you want to eat food. What good habit should you follow before eating?
10. Match the following:

Food Item	**Source**
Milk	Bird
Rice	Tree
Egg	Animal
Mango	Plant

11. Group the following foods : Carrot, Rice, Apple, Chapati
    - Eaten raw : __________
    - Must be cooked : __________
12. Is it good to eat only junk food every day?
13. Your friend wastes food on the plate. Is it right or wrong? Give one reason.
14. Draw and name four foods from plants and four foods from animals.

AP SCERT

5. சில உணவுகளை சாப்பிடுவதற்கு முன் ஏன் சமைக்க வேண்டும்?

6. நல்ல உணவுப் பழக்கங்கள் என்றால் என்ன? ஒரு உதாரணத்துடன் விளக்குக.

7. நாம் ஏன் பல்வேறு வகையான உணவுகளை சாப்பிட வேண்டும்?

8. ராணி தினமும் அரிசி, காய்கறிகள் மற்றும் பழங்களை சாப்பிடுகிறாள். அவளின் இந்த உணவுப் பழக்கம் எதை குறிக்கிறது? (   )

   a) கெட்ட பழக்கம்   b) நல்ல பழக்கம்

   c) சோம்பேறி பழக்கம்   d) தவறான பழக்கம்

9. விளையாடிய பிறகு, நீங்கள் உணவு உண்ண விரும்புகிறீர்கள். சாப்பிடுவதற்கு முன் நீங்கள் பின்பற்ற வேண்டிய நல்ல பழக்கம் என்ன?

10. பொருத்துக :

உணவுப்பொருள்	**ஆதாரம்**
பால்	பறவை
அரிசி	மரம்
முட்டை	விலங்கு
மாம்பழம்	தாவரம்

11. கீழுள்ள உணவுகளை வகைப்படுத்துக: கேரட், அரிசி, ஆப்பிள், சப்பாத்தி

   • பச்சையாக சாப்பிடப்படுவது : ___________

   • சமைத்து சாப்பிடப்படுவது : ___________

12. தினந்தோறும் ஆரோக்கியமற்ற ஜங்க் (துரித) உணவுகளை மட்டும் சாப்பிடுவது நல்லதா?

13. உங்கள் நண்பர் தட்டில் உணவை வீணாக்குகிறார். அது சரியா அல்லது தவறா? ஒரு காரணம் கூறுக.

14. தாவரங்களிலிருந்து கிடைக்கும் நான்கு உணவுகளையும், விலங்குகளிலிருந்து கிடைக்கும் நான்கு உணவுகளையும் வரைந்து பெயரிடுக.

AP – SCERT

15. Write a slogan on your own on ‘Healthy food’.
16. Rishi’s family is celebrating a festival today. Write the name of the festival and one traditional food they might prepare.
17. Anand eats only biscuits and soft drinks every day. Write any five healthy foods he can eat to stay healthy and write the reasons why these foods are better.

....

....

....

....

....

....

....

18. Make a Concept map of different food varities you eat during festivals.



AP – SCERT

15. ‘ஆரோக்கியமான உணவு’ பற்றிய ஒரு முழக்கத்தை எழுதுக.

16. ரிஷி குடும்பத்தினர் இன்று ஒரு பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். பண்டிகையின் பெயரையும், அவர்கள் தயாரிக்கக்கூடிய ஒரு பாரம்பரிய உணவையும் எழுதுக.

17. ஆனந்த் தினமும் பிஸ்கட் மற்றும் குளிர்பானங்களை மட்டுமே சாப்பிடுகிறார். ஆரோக்கியமாக இருக்க அவர் சாப்பிட வேண்டிய ஐந்து ஆரோக்கியமான உணவுகளை எழுதி, இந்த உணவுகள் ஏன் சிறந்தவை என்பதற்கான காரணங்களை எழுது.

....

....

....

....

....

....

....

18. பண்டிகை காலங்களில் நீங்கள் சாப்பிடும் பல்வேறு வகையான உணவுகளின் ஒரு கருத்து வரைபடத்தை உருவாக்குக.



AP – SCERT

Lesson 6

Water - A Precious Gift

G8H3N7

Learning Outcomes

Pupils will be able to:

- Explain the importance of water. (CG-2)
- Recognize different water resources. (CG-4)
- Understand the importance of pure water. (CG-3)
- Know how water is used and misused. (CG-3)
- Know the reasons of water scarcity. (CG-4)
- Describe ways to save water. (CG-3)
- Follow water-saving methods in their daily life. (CG-4)



AP SCERT

பாடம் 6

தண்ணீர் - ஒரு விலைமதிப்பற்ற பரிசு

கற்றல் விளைவுகள்:

மாணவர்கள் இவற்றை செய்வர்:

- தண்ணீரின் முக்கியத்துவத்தை விளக்குவர். (CG-2)
- நீரின் பல்வேறு வளங்களை அடையாளம் காண்பர்.(CG-4)
- தூய நீரின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்வர்.(CG-3)
- நீரை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் மற்றும் பயன்படுத்தக்கூடாது என அறிவர். (CG-3)
- நீர் பற்றாக்குறைக்கான காரணங்களை அறிவர். (CG-4)
- நீர் சேமிப்பு முறைகளை விவரிப்பர்.(CG-3)
- அன்றாட வாழ்வில் நீர் சேமிப்பு முறைகளை பின்பற்றுவர்.CG-4)

M5K6G8



AP SCERT

Hai! I am the water drop. I fall from the clouds. I am very important for your life. Water is a gift of nature. You need water to live. Plants and animals also need water to live. You cannot live without water. You use water in many ways in your daily life. Do you know how I am used in your daily life? Come with me. I will tell my story on how important I am to you.

Uses of water :

Water is used for many activities in our homes.

Activity :

Children! Look at the pictures showing how we use water in our daily lives.

AP SCERT

Brushing teeth

Drinking

Bathing

Cleaning vegetables

Washing clothes

Watering plants

குழந்தைகளே! நான் மழைத்துளி. நான் மேகங்களிலிருந்து விழுகிறேன். உங்கள் வாழ்க்கைக்கு நான் மிகவும் முக்கியம். நீர் இயற்கையின் பரிசு. நீங்கள் உயிர்வாழ நீர் அவசியம். தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் உயிர்வாழ நீர் தேவை. நீங்கள் நீர் இல்லாமல் உயிர்வாழ முடியாது. உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீரை பல வழிகளில் பயன்படுத்துகிறீர்கள். உங்கள் அன்றாட வாழ்க்கையில் நான் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகிறேன் என்று உங்களுக்கு தெரியுமா? வாருங்கள் என்னுடன். நான் எனது கதையையும் உங்களுக்கு நான் எவ்வளவு முக்கியம் என்பதையும் கூறுகிறேன்.

நீரின் பயன்கள் :

நமது வீடுகளில் நீர் பல செயல்களுக்கு பயன்படுகிறது.

செயல் :

குழந்தைகளே! நமது அன்றாட வாழ்க்கையில் நீரை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைக் காட்டும் படங்களை உற்றுநோக்குக.

பல் துலக்குதல்

நீர் குடித்தல்

குளித்தல்


காய்கறிகளை கழுவுதல்

துணிகளைத் துவைத்தல்

செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல்

AP SCERT

Let us see the Pictures :

Put off Fire

Agriculture

Aquaculture

Construction

AP – SCERT

You have seen some of the uses of water. Let us know how important it is to others. Farmers can grow crops only if water is available.

Have you ever seen ponds where prawns and fishes are grown?

Sources of Water :

Where does the water in your house come from?

Does everyone in your neighbourhood get water from the same source?

Water comes from different sources. Rain is the main source of water.

Do You Know !

World Water Day is on 22nd March.

பின்வரும் படங்களைப் பாருங்கள் :

தீ அணைத்தல்

விவசாயம்

மீன் வளர்ப்பு

கட்டுமானம்

நீங்கள் நீரின் சில பயன்களை தெரிந்துகொண்டீர்கள்.மேலும் மற்றவர்களுக்கு நீர் எவ்வளவு முக்கியம் என்பதை தெரிந்துகொள்வோம். நீர் கிடைத்தால் மட்டுமே விவசாயிகள் பயிர்களை பயிர் செய்ய முடியும்.

இறால்கள் மற்றும் மீன்கள் வளர்க்கப்படும் குளங்களை நீங்கள் எப்பொழுதாவது பார்த்தீர்களா?

நீர் ஆதாரங்கள் (நீர் வளங்கள்)

உங்கள் வீட்டிற்க்கு நீர் எங்கிருந்து கிடைக்கிறது?

உங்கள் சுற்றுப்புறத்தில் இருக்கும் அனைவருக்கும் அதே நீர் ஆதாரத்திலிருந்து நீர் கிடைக்கிறதா?

நீர் பல்வேறு ஆதாரங்களிலிருந்து கிடைக்கிறது. அதில் மிக முக்கிய ஆதாரம் மழை.

உனக்குத் தெரியுமா !

உலக நீர் தினம்-மார்ச் 22 ஆகும்

AP SCERT

Oceans, rivers, lakes, streams, ponds and springs are the natural sources of water.

Ocean

River

Lake

Dams, wells, tubewells, handpumps, canals are man-made sources of water.

Dam

Canal

Well

Hand Pump



Tubewell

Borewell

SCERT

Activity :

Tick (✓) the water sources available in your village :

Source	Tick Mark	Source	Tick Mark
1. River		4. Tap water	
2. Canal		5. Bore well	
3. Well		6.Tank/Pond	

கடல்கள், நதிகள், ஏரிகள், நீரோடைகள், குளங்கள் மற்றும் நீரூற்றுகள் ஆகியவை இயற்கை நீர் ஆதாரங்கள் ஆகும்.

கடல்

நதி

ஏரி

அணைக்கட்டுகள், கிணறுகள், குழாய் கிணறுகள், கை பம்புகள், கால்வாய்கள் ஆகியவை மனிதனால் உருவாக்கப்பட்ட ஆதாரங்கள் ஆகும்.

அணைக்கட்டு

கால்வாய்

கிணறு

கை பம்பு



குழாய் கிணறு

ஆழ்துளை கிணறு

செயல் :

உங்கள் ஊரில் உள்ள நீர் ஆதாரங்களை டிக் (✓) குறியிடுக.

நீர் ஆதாரம்	(✓) குறி	நீர் ஆதாரம்	(✓) குறி
1. நதி (ஆறு)		4. குழாய் நீர்	
2. கால்வாய்		5. ஆழ்துளை கிணறு	
3. கிணறு		6. குளம்/தொட்டி	

SCERT

Scarcity of Water :



In many villages people get water from the village well. Some people walk very far to get water for their daily use. The wells and ponds dry up during summer and the water level in the bore wells also gets decreased. In some places people wait for the watertanker or public tap water.

AP – SCERT

நீர் பற்றாக்குறை :

பல கிராமங்களில் மக்கள் நீர் கொண்டுவர கிராம கிணற்றிற்கு செல்வர். மேலும் சிலர் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான நீருக்காக நீண்ட தூரம் நடந்து செல்வர். கோடை காலங்களில் கிணறுகளும் குளங்களும் வற்றிப் போகும். மேலும் ஆழ்துளை கிணற்றில் உள்ள நீரும் குறைந்து போகும். சில இடங்களில் உள்ள மக்கள் நீர் கொண்டுவரும் நீர் தொட்டி வாகனத்திற்க்காகவும் அல்லது பொது நீர் குழாய்களுக்காகவும் காத்திருக்கின்றனர்.

Think and Discuss

Kamali's father said that three parts of the Earth is covered with water. We have so much of water on the earth. But her aunt says that there is shortage of water. We should save water. If we waste water the way we do right now, we will have no water to drink one day. Think why.

Can you drink water directly from all the available sources?

Protected water :

We can see water around us, but we do not drink it directly from all the sources. It may be polluted due to different activities.

Let us observe these pictures. What are they doing?





Water gets polluted due to human activities. We have to drink pure water. The government is providing pure water under the safe drinking water scheme to all the people. Do not drink unsafe water.

Do not use unsealed or water stored in bottles and packets for a long time.

The water we drink should be clean and germs free. The most common way to purify water is **boiling**. We should boil water and cool it before drinking. We can also purify water by using water filters and water purifiers. Water should be stored in clean and closed containers.

சிந்தித்து கலந்துரையாடு

பூமியின் நான்கில் மூன்று பாகம் நீரால் சூழ்ந்துள்ளது என கமலின் அப்பா கூறினார். பூமியில் நமக்கு நிறைய நீர் இருக்கிறது எனினும் நீர் பற்றாக்குறை இருப்பதாக அவளுடைய அத்தை கூறுகிறாள். நாம் நீரை சேமிக்க வேண்டும். நாம் நீரை வீணாக்கிக் கொண்டே இருந்தால், ஒரு நாள் நீர் கிடைக்காத நிலை உருவாகும். ஏன் என்று சிந்திக்கவும்.

அனைத்து நீர் ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் நீரை நேரடியாக குடிக்க முடியுமா?

பாதுகாக்கப்பட்ட நீர் :

நம்மைச்சுற்றி நீர் இருப்பதை காணலாம். ஆனால் அனைத்து நீர் ஆதாரங்களில் இருந்தும் நீரை நேரடியாக குடிப்பது கிடையாது. பல்வேறு செயல்களால் அவை மாசடைந்திருக்கலாம்.

பின் வரும் படங்களை கவனியுங்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள்?



மனிதனின் சில செயல்களால் நீர் மாசடைகிறது. நாம் சுத்தமான நீரை குடிக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் சுத்தமான குடிநீரை அரசாங்கம் வழங்கி வருகிறது. பாதுகாப்பற்ற குடிநீரை குடிக்க வேண்டாம்.

பாட்டில்கள் மற்றும் பாக்கெட்டுகளில் நீண்ட நாட்களாக பயன்படுத்தாமல் மற்றும் மூடி அடைக்கப்படாமல் உள்ள நீரை பயன்படுத்த வேண்டாம்.

நாம் குடிக்கும் நீரானது சுத்தமாகவும் கிருமிகள் இல்லாமலும் இருக்க வேண்டும். நீரை சுத்திகரிக்கும் வழிகளில் பொதுவான முறை **கொதிக்கவைத்தல்** ஆகும். நாம் நீரை குடிப்பதற்க்கு முன்னர் கொதிக்கவைத்து பின்னர் குளிர்விக்க வேண்டும். நீர் வடிப்பான்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பான்கள் பயன்படுத்தியும் நீரை சுத்திகரிக்கலாம். சுத்தமான மற்றும் மூடிய பாத்திரங்களில் மட்டுமே நீரை சேமித்து வைக்க வேண்டும்.

Activity :

Draw a picture of water storage vessels at your home.

Walk around and observe the drawings by your classmates.

Let Us Know !



Till date, we heard about an assembly bell, class bell and break bell. But there is a special bell that rings three times a day, that is **'Waterbell'** which aims at encouraging students to drink sufficient water during the day to stay hydrated and fit.



AP SCERT

Most of us use water bottles to drink water.

Why should we clean water bottles frequently? Because, disease causing germs may develop in the bottle. If we use such bottles or vessels, we may fall sick. So, water bottle should be cleaned with salt water regularly.

Activity :

Observe and do the process of cleaning a bottle.

Put a pinch of salt in the water bottle, pour some warm water and clean it with a bottle brush.

Wastage of water :

My dear children, I want to say something important. Water is very precious. Please do not waste water. Do you know what happens if you waste water?

செயல் :

உங்கள் வீடுகளில் தண்ணீரை சேமிக்கப்பயன்படும் கொள்கலன்களின் படங்களை வரைக. வகுப்பறையில் சக மாணவர்கள் வரைந்த படங்களை உற்றுநோக்குக.

நாம் தெரிந்துக்கொள்வோம் !



இதுவரை நாம் காலை வழிபாட்டு மணி, வகுப்பு மணி மற்றும் இடைவெளி மணி பற்றி கேட்டிருக்கிறோம். ஒரு நாளைக்கு மூன்று முறை ஒலிக்கும் ஒரு சிறப்புமணி உள்ளது. அதுதான் **"தண்ணீர் மணி"**. இதன் முக்கிய நோக்கம் மாணவர்களை நாள் முழுவதும் போதுமான அளவு நீர் குடிக்க ஊக்குவித்தலாகும். இதனால், மாணவர்கள் நீரேற்றப்பட்டு ஆரோக்கியமாக இருப்பர்.



நம்மில் பலர், நீரைக் குடிக்க தண்ணீர் புட்டி (பாட்டில்கள்) களை பயன்படுத்துகிறோம்.

ஏன் அவ்வப்பொழுது தண்ணீர் பாட்டில்களை சுத்தம் செய்ய வேண்டும்? ஏனெனில் நோய்களுக்கு காரணமான கிருமிகள் அந்த பாட்டிலில் உருவாகக் கூடும். அவ்வாறு உள்ள பாட்டில்கள் அல்லது பாத்திரங்களை பயன்படுத்துவதால் நாம் நோய்வாய்ப்பட வாய்ப்புள்ளது. எனவே தண்ணீர் பாட்டில்களை உப்பு நீரால் தவறாமல் சுத்தம் செய்ய வேண்டும்.

செயல் :

பாட்டிலை சுத்தம் செய்யும் முறையை உற்றுநோக்கு.
ஒரு சிட்டிகை உப்பை பாட்டிலில் போடவும். பிறகு அதில் சிறிதளவு சூடான நீர் ஊற்றவும். அதை பாட்டில் சுத்தம் செய்யும் தூரிகையால் சுத்தம் செய்யவும்.

நீர் வீணாதல் :

அன்பான குழந்தைகளே, முக்கியமான ஒன்றை கூற விரும்புகிறேன். நீர் மிகவும் விலைமதிப்பற்றது. எனவே தயவு செய்து நீரை வீணாக்காதீர்கள். நீங்கள் அவ்வாறு நீரை வீணாக்கினால் என்ன நடக்கும் தெரியுமா?

AP SCERT

Let us observe the following pictures.



Think and Discuss

Rama noticed water over flowing and getting wasted from a tap in her school wash area. Discuss the immediate steps Rama should take.

AP SCERT

How to save water?

Suma's family follows some steps at home to save water.

- Use a small glass to drink water.
- Wash fruits and vegetables in a bowl of water and not under running tap water.
- Never allow water to overflow from the bucket.
- Turn off the taps immediately after using water for brushing, washing clothes, taking bath etc.
- Check the pipes for leaks.
- Turn off the motor when the tank is full.
- Create awareness on not to waste water.
- Put up slogans on wastage of water.
- They will not allow water to overflow.
- They will turn off the tap before water overflows.

பின் வரும் படங்களை உற்றுநோக்கவும் :

சிந்தித்து கலந்துரையாடு

ரமா தனது பள்ளி கழிவறை குழாயில் நீர் அதிகமாக வழிந்து வீணாவதை கவனித்தாள். ரமா உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன?

நீரை எவ்வாறு சேமிப்பது ?

சுமாவின் குடும்பத்தினர் தங்கள் வீட்டில் நீரை சேமிக்க சில வழிமுறைகளை பின்பற்றுகின்றனர்.

- நீரை குடிப்பதற்கு சிறிய டம்ளரை பயன்படுத்துதல்.
- பழங்கள் மற்றும் காற்கறிகளை ஓடும் குழாய் நீரில் கழுவாமல் பாத்திரத்தில் நீரை நிரப்பி கழுவுதல்.
- வாளியில் நீர் நிரம்பி வழியாமல் கவனித்தல்.
- பல் துலக்குதல், துணி துவைத்தல், குளித்தல் ஆகியவற்றிற்கு பின் உடனடியாக குழாயை நிறுத்துதல்.
- குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை சரிபார்த்தல்.
- நீர் தொட்டி நிரம்பிய உடனே மோட்டரை நிறுத்துதல்.
- நீர் வீணாகுதலை தடுக்க விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- நீரை வீணாக்க வேண்டாம் எனும் முழக்கங்களை வைத்தல்.
- நீரை நிரம்பி வழிய விடக்கூடாது.
- நீர் நிரம்பி வழியும் முன்பே, குழாயை நிறுத்த வேண்டும்.



AP SCERT

Key Words

water resources, protected water, irrigation, stored water, scarcity, water tanker, aquaculture, agriculture.

What we have learnt ?

- We use water in many ways in our day - to - day life.
- Rain is the main source of water.
- Oceans, rivers, lakes, streams, ponds and springs are natural sources of water.
- Dams, wells, tubewells, hand pumps and canals are man-made sources of water.
- Water gets polluted due to human activities.
- We have to drink clean water only.
- We should not waste water.

AP SCERT

Improve Your Learning

1. Why do we need water?
2. Name any two water resources.
3. Write one use of water at home.
4. What happens when there is less water available?
5. Why is water called a precious resource?
6. After washing hands. What should you do immediately? (   )

   A) Ignore it   B) Close the tap

   C) Call a friend   D) Walk away

முக்கியச் சொற்கள்

நீர் ஆதாரங்கள், பாதுகாக்கப்பட்ட நீர், நீர் பாய்ச்சுதல், தேக்க நீர், நீர் பற்றாக்குறை, நீர்தேக்கத் தொட்டி, மீன் வளர்ப்பு, விவசாயம்.

நாம் கற்றவை

- நம் அன்றாட வாழ்க்கையில் நீரை பல்வேறு வழிகளில் பயன்படுத்துகிறோம்.
- மழை மிக முக்கியமான நீர் ஆதாரமாகும்.
- கடல்கள், நதிகள், ஏரிகள், நீரோடைகள், குளங்கள் மற்றும் நீரூற்றுகள் ஆகியவை இயற்கையான நீர் ஆதாரங்களாகும்.
- அணைக்கட்டுகள், கிணறுகள், குழாய் கிணறுகள், கைபம்புகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவை மனிதனால் உருவாக்கப்பட்ட நீர் ஆதாரங்கள் ஆகும்.
- மனிதனின் சில செயல்களால் நீர் மாசடைகிறது.
- நாம் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட நீரையே குடிக்க வேண்டும்.
- நாம் நீரை வீணாக்கக் கூடாது.

AP SCERT

கற்றலை மேம்படுத்துதல்

1. நமக்கு ஏன் நீர் தேவை?
2. ஏதேனும் இரண்டு நீர் வளங்களை பெயரிடுக.
3. வீட்டில் தண்ணீரின் ஒரு பயன்பாட்டை எழுதுக.
4. தண்ணீர் குறைவாக இருக்கும்போது என்ன நடக்கும்?
5. நீர் ஏன் விலைமதிப்பற்ற வளம் என அழைக்கப்படுகிறது?
6. கைகளை கழுவிய பின் உடனடியாக நீ என்ன செய்வாய்? (   )

   A) அலட்சியப்படுத்துவேன்   B) குழாயை மூடுவேன்

   C) நண்பனை அழைப்பேன்   D) விலகிச் செல்வேன்

7. Pictures of mudpot, over head tank, mudpot covered with cloth, plastic pot are given below.

Circle(◯) the vessels used to store drinking water at home.

Tick (✓) the vessel that keeps water cool naturally.

Put a cross (✗) on the vessel that is not good for storing water for many days.

Match the vessel with its place of use:

a) Clay pot — 1) Terrace

b) Overhead tank — 2) Kitchen

8. Naresh leaves the tap open while brushing his teeth. Is he doing the right thing? Give one reason for your answer.

9. Why should everyone be worried about water scarcity?

10. What questions would you ask your parents to know about the water sources in the olden days?

1.

2.

3.

AP – SCERT

7. மண் பானை, மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, துணியால் மூடப்பட்ட மண்பானை, நெகிழிப்பானை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன.

வீட்டில் குடிநீரை சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை (◯) வட்டமிடவும்.

தண்ணீரை இயற்கையாக குளிரூட்டும் பாத்திரத்திற்கு (✓) குறியிடவும்.

நீரை நீண்ட நாட்களுக்கு சேமிக்க உகாத பாத்திரத்திற்கு (×) குறியிடவும்.

பாத்திரத்தை அதன் பயனுக்கேற்ற இடத்தில் பொருத்தவும்.

a) மண்பானை	1) மொட்டை மாடி
b) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி	2) சமையல் அறை

8. நரேஷ் பல்துலக்கும் போது குழாயை திறந்து வைக்கிறான். அவன் செய்வது சரியா? உங்கள் பதிலுக்கு காரணம் கூறுக.

9. நீர் பற்றாக்குறைப்பற்றி ஏன் எல்லோரும் கவலைப்படவேண்டும்?

10. பழங்காலங்களில் நீரின் ஆதாரம் (வளங்கள்) பற்றி தெரிந்துகொள்ள உங்கள் பெற்றோரிடம் என்னென்ன கேள்விகள் கேட்பீர்கள்?

1.

2.

3.

AP – SCERT